பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 07 வியாழக்கிழமை (20.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :144







# புத்தூரில் பொதுமக்கள் ஐவர்
# கோரமாகச் சுட்டுப் படுகொலை!

## இராணுவ நிலைகளுக்கு அண்மையில் சடலங்கள் சோதனைக்காக வழிமறித்துக் கொல்லப்பட்டனரா?





மேலும் படங்கள் 04 ஆம் பக்கத்தில்...

புத்தூர்,ஏப்ரல் 20

புத்தூர் - சாவகச்சேரி வீதியில் நேற்றுமுன்தினம் முன்னிரவு ஓட்டோ ஒன்றில் பயணித்த நால்வர் உட்பட ஐவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டபின் சடலங்களாக வீசப்பட்டிருக்கின்றனர்.

யாழ். மாநகரசபைப் பணியாளர் ஒருவர் உட்பட ஐந்து ஆண்களே இவ்வாறு கூட்டாகக் கொன்று போடப்பட்டிருக்கின்றனர்.

புத்தூரில் உள்ள பிரதான படைமுகாம் மற்றும் இராணுவ நிலைகளுக்கு அண்மையில் வைத்து இவர்கள் ஐவரும் கோரமாகக் கொலைசெய்யப்பட்டிருப்பது அப்பிரதேசம் எங்கும் மக்கள் மத்தியில் கொதிப்பையும் பதற்றத்தையும் உருவாக்கி இருக்கின்றது.

புத்தூர் கிழக்கு ஊறணிக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உட்பட ஐந்து ஆண்களே கொல்லப்பட்டவர்கள் ஆவர். இவர்களில் நால்வர் ஓட்டோ ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்த சமயம் அப்பகுதியில் வழி மறிக்கப்பட்டு சுடப்பட்டிருக்கின்றனர். ஐந்தாவது நபர் அந்த வீதி வழியே சைக்கிளில் வந்துகொண்டிருந்த சமயம் கொல்லப் பட்டிருக்கிறார் என்று ஆரம்பத்தகவல்

(02ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூர் படுகொலையை இராணுவத்தினரே புரிந்துள்ளனர்
## குற்றம் சுமத்தி யாழ். மாவட்ட அரசியல்துறை அறிக்கை

கிளிநொச்சி,ஏப்.20

புத்தூர் படுகொலையை இராணுவத்தினரே செய்துள்ளனர்.

- இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளது யாழ். மாவட்ட அரசியல்துறை.

புத்தூரில் அப்பாவிப் பொதுமக்கள் ஐவர் கோரமாக சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அரசியல்துறை இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளது.

அரசியல்துறையின் அறிக்கை வருமாறு:-

தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிராகரித்து - எமது மக்களின் மனிதாபிமான தேவைகளை புறந்தள்ளி எமது தலைமைப்பீடம் மேற்கொண்ட சமாதான சமிக்ஞைகளைத் தூக்கியெறிந்து தமிழின விரோதப் போக்கைக் கடைப்பிடித்துவரும் ஸ்ரீலங்கா அரசும், துணை ஆயுதக் குழுக்களும் தமிழர்களுடைய இருப்பையே இல்லாது ஒழிக்கும் வகையில் இராணுவ நெருக்குவாரங்களையும் படு - கொலைகளையும் புரிந்து வருகின்றன.

அரசு வன்முறைகளை நிறுத்தும் வகையில் - ஜெனீவாவில் இணக்கங்காணப்பட்ட விடயங்களை இன்னமும் நடைமுறைப்படுத்தாத அதேநேரத்தில், அதனை முற்று முழுதாக மீறி துணைக்குழுக்களின் செயற்பாடுகளை தீவி

(13ஆம் பக்கம் பார்க்க)

**நாளைய கல்விச்சுடரில்**

புலமைப்பரிசில் வினாத்தாள், விடைக் குறிப்புகள், பொருளியல் விடைக் குறிப்புகள் என்பன வெளியாகும்.

## சோபையிழந்த வலிகாமம் கிழக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.20

புத்தூரில் அப்பாவிப் பொதுமக்கள் 5பேர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தி பரவியதையடுத்து தென்மராட்சி மற்றும் வலிகாமம் கிழக்குப் பகுதிகள் நேற்றையதினம் சோபையிழந்தன.

பொதுமக்கள் பீதிகாரணமாக நடமாட்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவிலில் நேற்றிரவு வர்த்தகர் சுட்டுக்கொலை!

கோண்டாவில்,ஏப்.20

கோண்டாவில் சந்தியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றினுள் வைத்து அதன் உரிமையாளர் நேற்றிரவு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

யாழ். - பலாலி வீதியில், கோண்டாவில் சந்தியில் உள்ள பல்பொருள் வாணிப நிலையத்தில் நேற்றிரவு 7 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வர்த்தகரான தம்பாப்பிள்ளை அம்பிகை

(13ஆம் பக்கம் பார்க்க)

## பிறவுண் வீதி காவலரண் பகுதியில் நேற்றிரவு தொடர் வேட்டுச்சத்தம்

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக, பிறவுண் வீதி - அரசடி வீதிச் சந்தியிலுள்ள இராணுவக் காவலரண் பகுதியில் நேற்றிரவு 10 நிமிடங்கள் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

நேற்றுமுன்னிரவு 7.15 மணிக்கும் 7.45 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இந்தத் திடீர் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்று அப்பகுதி குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். அங்கு நிலவிய அசாதாரண நிலைமைகளையடுத்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்களால் ஏற்பட்ட சேதவிவரம் குறித்து அறிந்து கொள்ள முடியவில்லை. (எ)

## நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜூன் மாதம் பொதுத் தேர்தல்
### ஜனாதிபதி மஹிந்த உத்தேசம்

கொழும்பு, ஏப்ரல் 20

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து எதிர்வரும் ஜூன் மாதம் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தேசித்திருக்கிறார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அமைதி முயற்சிகளுக்கான வாய்ப்புகள் அருகி போரொன்று வெடிக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கும் தற்போதைய நிலையில் ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கிறார்.

ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய இனவாத சக்திகளைத் தனது நேச அணியில் வைத்துக்கொண்டிருக்கும் ஜனாதி

(02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்வதே பொது மக்களுக்குப் பாதுகாப்பானது

## தொழில்நுட்ப மாணவர் ஒன்றியம் ஆலோசனை

பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்வதே பொதுமக்களுக்குப் பாதுகாப்பானது. புத்தூர் படுகொலை இதனையே உணர்த்துகின்றது.

- இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். உயர் தொழில்நுட்ப மாணவர் ஒன்றியம்.

புத்தூரில் பொதுமக்கள் ஐவர் கோரமாகச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே மாணவர் ஒன்றியம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

மாணவர் ஒன்றிய அறிக்கை வருமாறு:-

அண்மைக்காலமாக தமிழ்மக்கள் மீது படுகொலைகள், கைதுகள், சித்திரவதைகள், தடுப்புக்காவல்கள் என பேரினவாதிகள் இன அழிப்பை பல்வேறு வடிவங்களில் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர்.

இதன் ஒரு அங்கமாகவே ஓட்டோவில் பயணித்துக்கொண்டிருந்த ஐந்து அப்பாவிப் பொதுமக்கள் புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் இராணுவமுகாம் அருகில் வைத்து இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்யவென கொண்டுவரப்பட்ட காடையர்களால் மிகவும் கொடூரமான முறையில் இந்தப் படுகொலை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்களை எம்மால் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. இச்சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். குறிப்பாக, திருகோணமலையில் கடற்படையும், இராணுவமும் பார்த்துக்கொண்டுநிற்க இனவெறிக் காடையர்களால் தமிழ்மக்கள் கொலை செய்யப்பட்டனர்.

அதேபோன்று, யாழ்ப்பாணத்திலும் இந்தப் படுகொலை இடம்பெற்றுள்ளது. இதனை முன்னரே உணர்ந்துகொண்ட தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் கடந்தவாரம் யாழ். குடாநாட்டு மக்களை பாதுகாப்பான இடத்திற்குச் செல்லும்படி கோரியிருந்தது.

எனவே, புத்தூர்ச் சம்பவத்திற்குப் பின்னரும் மக்கள் அநியாயமாக சிங்கள வெறியாட்டத்திற்கு பலியாகாமல் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று குடாநாட்டை நாம் அனைவரும் மீட்டுக்கொண்டு மீளவும் எமது சொந்த தேசங்களுக்குத் திரும்புவோம் - என்று அதில் உள்ளது. (எ)

# போவர் லண்டனில் பாலசிங்கத்தை சனியன்று சந்திப்பு

கொழும்பு, ஏப். 20

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பான பேச்சுகளை இலங்கையில் முடித்துக் கொண்டு கொழும்பிலிருந்து நாளை நோர்வே திரும்பவுள்ள விசேட தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர், செல்லும் வழியில் லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

லண்டனிலுள்ள பாலசிங்கத்தின் இல்லத்தில் எதிர்வரும் சனியன்று இந்தப் பேச்சுகள் நடைபெறவுள்ளன. கொழும்பிலும், வன்னியிலும் நடத்தப்பட்ட பேச்சுகள் குறித்து போவர் இங்கு பாலசிங்கத்துக்கு விளக்கமளிக்கவுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

# பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,ஏப்.20

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இன்று சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறும். (எ-117)

# கடற்படை பவுஸர் மீது மன்னாரில் குண்டு வீச்சு

## இரண்டு சிப்பாய்கள் காயம்

மன்னார், ஏப். 20

மன்னார், பேசாலை, வங்கப்பாடு பகுதியில் கடற்படையினரின் தண்ணீர் பவுஸர் ஒன்றின்மீது நேற்றுக்காலை கைக்குண்டுத் தாக்குதலொன்று நடத்தப்பட்டதில் கடற்படைச் சிப்பாய்கள் இருவர் காயமடைந்தனர்.

பேசாலை வங்கப்பாடு பகுதியில் மறைந்திருந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் இந்தத் தாக்குதலை நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தையடுத்து கடற்படையினரும், இராணுவத்தினரும் குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதியில் தேடுதல்களை நடத்தினர்.காயமடைந்த சிப்பாய்கள் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். சம்பவத்தையடுத்து மன்னார் - பேசாலை வீதிப் போக்குவரத்து பல மணி நேரம் பாதிக்கப்பட்டிருந்தது. நேற்றைய இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் டி.எம். திஸநாயக்க (வயது 26), ஹேவாமன்ன (வயது 27) ஆகியோரென மன்னார் பொலீஸார் தெரிவித்தனர். (எ-க)

# யாழ். பல்கலையில் நேற்று அன்னை பூபதி நினைவு நிகழ்வு



யாழ்ப்பாணம்,ஏப்.20

தியாகதீபம் அன்னை பூபதியின் 18ஆவது ஆண்டு நினைவுதினம் யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினரால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவுத் தூபியடியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இந்த நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

பொதுச்சுடர் ஏற்றல், ஈகைச் சுடர் ஏற்றல் என்பன இடம்பெற்றது. தொடர்ந்து அன்னை பூபதியின் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (எ-14)(33)

# நாடாளுமன்றத்தை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நேச சக்திகளின் எதிர்ப்பினால் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதில் பல்வேறு சிரமங்களையும், தடைகளையும் எதிர்நோக்கி வருகிறார். இந்த எதிர்ப்பு ஜனாதிபதிக்குப் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் பொதுத் தேர்தல் ஒன்றை பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் தனித்து தற்போது எதிர்நோக்குமாயின் ஐக்கிய தேசியக் கட்சிக்கே நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெறுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருப்பதால், நாடாளுமன்றத்தைக் கலைத்து, தேர்தலை நடத்துவதன் மூலம் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான பொறுப்பை ஐ.தே.க. தலைமையிலான அரசிடம் வழங்குவதற்கும் ஜனாதிபதி உத்தேசித்துள்ளார் எனத் தெரிகிறது.

அப்படி நேருமாயின், தாம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்து கொண்டு ஐ.தே.கட்சி தலைமையிலான சிறுபான்மை அரசு அமைதி முயற்சிகளில் ஈடுபடும் போது தமது அதிகாரத்தின்மூலம் அதனை சரியான வழியில் நடத்திச் செல்ல முடியும் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருதுகின்றார் எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறு ஜனாதிபதியின் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் ஒன்றிணைந்து அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் திட்டத்துக்கு சர்வதேச ஆசீர்வாதமும், பின்புல வழிகாட்டலும் இருப்பதாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

நாடாளுமன்றத்தை உடன் கலைத்து ஜூனில் பொதுத் தேர்தல் நடத்தும் தமது திட்டம் குறித்து மேலும் விவாதிப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் அவசரக் கூட்டத்தை கட்சியின் பதில் தலைவரும், ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ நேற்றிரவு கூட்டியிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-க)

# கொரிய பிரஜை உட்பட மூவர் கிளைமோர் வெடிப்பில் காயம்

## வவுனியா அருகே சம்பவம்

வவுனியா, ஏப்.20

வவுனியா, மகாகச்சக்கொடி, அளுத்கம சந்திக்கருகில் நேற்று நண்பகல் இடம்பெற்ற கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் கொரிய பிரஜையொருவர் உட்பட மூன்று பேர் படுகாயமடைந்தனர்.

கொரிய பிரஜை உட்பட மூன்று பேர் மகாகச்சக்கொடிக்கு 'பிக்கப்' வாகனமொன்றில் சென்று கொண்டிருந்தனர். அளுத்கம சந்திக்கருகில் வைத்து இந்த வாகனம் கிளைமோரில் சிக்கியது. இதனால் வாகனத்தின் முற்பகுதி கடுமையான சேதங்களுக்குள்ளாகியது.

சம்பவத்தில் காயமடைந்த கொரிய பிரஜையான லாண்லீ (வயது 51) உட்பட மூன்று பேர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். வவுனியா பொலீஸார் இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (எ-க-13-164)

# புத்தூரில் பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மூலம் தெரியவந்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் மாலை இருள் பரவும் வேளைக்குப் பின்னர், புத்தூர் - சாவகச்சேரி வீதியில் சென்ற இவர்கள் பின்னர் வீடு திரும்பவில்லை. ஐவரும் சடலங்கள் நேற்றுக் காலையே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

நண்பர் ஒருவரை ஊறணிக் கிராமத்தில் உள்ள அவரது வீட்டில் இறக்குவதற்காக ஓட்டோவில் சென்ற நால்வர் அவரை வீட்டில் இறக்கிவிட்டு அதே வீதியில் திரும்பி வந்து கொண்டிருந்த சமயத்திலேயே வழியில் கொல்லப்பட்டிருக்கின்றனர். இவர்கள் பயணம் செய்த ஓட்டோ அப் பகுதியில் இராணுவ நிலை ஒன்றின் அருகே நிறுத்தப்பட்டு தீவிர சோதனைக்குப் பின்னர் மேற்கொண்டு பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டது என்று தகவல் கிடைத்துள்ளது. அந்த இராணுவச் சோதனை நிலையைத் தாண்டி வரும் வழியிலேயே கொல்லப்பட்ட ஐவரது சடலங்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாக வீசப்பட்டுக் கிடந்தன.

இவர்கள் ஐவரும் வீதியில் ஒரே இடத்தில் வைத்துக் கொல்லப்பட்ட பின்னர் தரையில் இழுத்துச் செல்லப்பட்டு தொலைவில் ஆங்காங்கே சடலங்களாக வீசப்பட்டிருப்பது தரையில் காணப்படும் இரத்தக் கறைகள் மூலம் தெரியவந்திருக்கிறது. அத்துடன், சடலங்கள் கிடந்த இடங்களில் தரையில் சப்பாத்துக் கால் தடங்களும் காணப்பட்டன என்று கூறப்படுகிறது.

படை நிலையில் இருந்து சுமார் 150 மீற்றர் தொலைவில் வயல்வெளியில் இரண்டு சடலங்களும், வயல் கரையில் வீதியோரத்தில் ஒரு சடலமும் கிடக்கக் காணப்பட்டன. ஏனைய இரு சடலங்களும் படை நிலையில் இருந்து சற்றுத் தொலைதூரத்தில் வீதியோரமாக ஒன்றாகக் கிடந்தன.

சடலங்களில் தலை மற்றும் முகப் பகுதிகளில் சூட்டுக் காயங்களை ஒத்த காயங்கள் காணப்பட்டன. மிக நெருக்கமாக வைத்து கைத்துப்பாக்கிகளால் இவர்கள் சுடப்பட்டி-ருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இவர்கள் பயணம் செய்த ஓட்டோவும் சைக்கிள் ஒன்றும் வீதியில் காணப்பட்டன. ஓட்டோவின் உள்ளே இரத்தக் கறைகள் காணப்பட்டன. எனினும் ஓட்டோவுக்கு சேதம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

கொலையுண்டவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

* பாலசுப்பிரமணியம் கண்ணதாஸன் (வயது - 27) இவர் ஓட்டோ சாரதி ஆவார்.
* கந்தசாமி கௌரிபாலன் (வயது - 32) மூன்று குழந்தைகளின் தந்தையான இவர் யாழ்.மாநகர சபையின் வேலைத்தளப் பகுதிச் சிற்றூழியராவார். இவர் சைக்கிளில் வந்த சமயம் வழிமறிக்கப்பட்டு சுடப்பட்டுள்ளார்.
* செல்லையா இரத்தினம் (வயது - 25) இவர் கூலித் தொழிலாளி ஆவார்.
* தங்கராசா கவீந்திரன் (வயது - 27) இவரும் ஓட்டோ சாரதியாகத் தொழில் புரிந்து வந்தார்.
* மகாதேவன் கிஷோக்குமார் (வயது- 20)

இந்த ஐவரும் புத்தூர் கிழக்கு ஊறணிக் கிராமத்தைச் சேர்ந்தவர்களாவர்.

புத்தூர் - சாவகச்சேரி வீதியில் இந்தக் கொலைகள் நடந்த பிரதேசம் குடிமனைகள் இல்லாத பற்றைக் காட்டுப் பகுதி ஆகும்.

இந்த வீதியூடாகப் பயணிப்போர் வழி நெடுகிலும் உள்ள இராணுவ நிலைகளைத் தாண்டியே செல்லமுடியும்.

ஓட்டோவில் சென்ற நால்வரதும் நண்பர் ஒருவர் தெரிவித்த தகவலின்படி சம்பந்தப்பட்ட ஓட்டோவை வழியில் படையினர் சோதனையிட்டனர் என்பது தெரியவந்துள்ளது.

காணாமற்போன ஐவரும் கொல்லப்பட்டுக் கிடக்கின்றனர் என்ற செய்தி பரவியதும் புத்தூர்ப் பிரதேசம் எங்கும் பெரும் பயப்பீதி பற்றிக் கொண்டது. கொலையுண்டவர்களின் உறவினர்கள் திரண்டு கதறிக் குளறியவாறு சடலங்கள் கிடந்த இடத்துக்கு ஓடி வந்தனர். பெரும் எண்ணிக்கையில் உறவினர்கள் திரண்டு தரையில் வீழ்ந்தும், ஒருவரை ஒருவர் கட்டிப் புரண்டும் கதறிய காட்சி நெஞ்சை உருக வைத்தது.

அச்சுவேலிப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸாரும் படையினரும் நேற்றுக் காலையில் அந்தப் பகுதிக்கு வந்தனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் அங்கு வந்து கொலைகள் நடந்த இடங்களைப் பார்வையிட்டு விசாரணை நடத்தினர்.

மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் சடலங்களைப் பார்வையிட்டனர். பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக ஐந்து சடலங்களும் யாழ்.போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

அப்பாவிகளான ஆண்கள் ஐவர் கோரமாகச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருப்பது புத்தூர்ப் பகுதியில் பெரும் பரபரப்பையும் மக்கள் மத்தியில் பீதியையும் கொதிப்பையும் உருவாக்கி இருக்கிறது. (ஐ-7-14-86)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.


## சமாதான நடவடிக்கைகளுக்கு குறுக்கே நிற்கும் நந்திகள்

விடுதலைப் புலிகள் தமது கிழக்கு மாகாணத் தளபதிகளும் போராளிகளும் வன்னிக்கு வந்து திரும்புவதற்கு தனியார் ஹெலிக்கொப்டர்களைப் பயன்படுத்தும் யோசனையை ஏற்கமாட்டார்கள் என்பது ஓரளவுக்கு உறுதியாகிவிட்டது.

நோர்வேயின் அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான விசேட தூதுவர் ஜான் ஹன்ஸன் போவர் இன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களைச் சந்திக்கும்போது, புலிகளின் இந்த முடிவு போவருக்குத் தெரியப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேசமயம், அடுத்த சுற்று அமைதிப் பேச்சுகள் விரைவில் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவு என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல்கள் வெளியிட்டிருக்கின்றன.

இந்த இக்கட்டு நிலையில் அடுத்தது என்ன என்று கேள்வி எல்லோர் மனதிலும் தொக்கி நிற்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி முற்பகுதியில் நிலவிய, அசாதாரண சூழ்நிலையை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மீண்டும் நிழல் யுத்தம் தீவிரமடையும் ஏதுநிலை புலப்படுகின்றது. தற்போதைய நிழல்யுத்தம் மேலும் உக்கிரமடைந்து நிஜ யுத்தமாக வெடிக்கும் ஆபத்தும் தோற்றாமல் இல்லை.

விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுக்குச் செல்ல இணங்காததால்தான் இந்த நிலைமை என்று தெற்கிலும் சர்வதேச ரீதியிலும் சில தரப்புகளால் குற்றம் சுமத்தப்படுகின்றது.

உண்மை நிலையை - கள யதார்த்தங்களை - புரிந்து கொள்ளாமல் முன்வைக்கப்படும் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள் இவை.

இரண்டு தசாப்தகாலக் கொடூரப் போரில் பேரழிவுகளை ஏற்படுத்தி மோதிக் கொண்ட இரண்டு தரப்புகள் அமைதிப் பேச்சு மேசைக்கு செல்ல வேண்டுமாயின் அதற்கான புறச்சூழல் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அமைதிப் பேச்சுகளை ஒட்டி விட்டுக்கொடுப்புடன் விடயங்களை அணுகும் முனைப்பை இரு தரப்பும் வெளிப்படுத்தவேண்டும். பரஸ்பரம் நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் கட்டியெழுப்பும் மனப்பாங்கு இரு தரப்பிடமும் இருக்கவேண்டும்.

இவை இல்லாமல், பேச்சு மேசைக்குப் போய் அங்கும் மோதிக் கொள்வதில் அர்த்தமில்லை.

தீர்வு காணும் இலக்கோடு அல்லாமல், எதிர்த்தரப்பைத் தீர்த்துக் கட்டும் நோக்கோடு பேச்சு மேசைக்குச் செல்வது வெறும் அபத்தமின்றி வேறில்லை.

மஹிந்தரின் புதிய அரசோடு விடுதலைப் புலிகள் கடந்த பெப்ரவரியில் ஜெனிவாவில் நடத்திய முதல் சுற்றுப் பேச்சு அத்தகைய புறச்சூழலில்தான் நடந்தது. அந்த மேசையில் எட்டப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் காட்டப்படும் உதாசீனம் கூட அந்தப் போக்கிலிருந்து சம்பந்தப்பட்டோர் விடுபடவேயில்லை என்பதையே தெளிவுபடுத்துகின்றது.

கடந்த நான்கு ஆண்டு காலமாக நீடிக்கும் இந்த யுத்த நிறுத்த காலத்தில் முதலில் ரணிலின் அரசினாலும், பின்னர் கடும் போக்குடன் நடந்து கொண்ட சந்திரிகாவின் அரசினாலும் கூட புலிகளின் கிழக்குத் தளபதிகளின் போக்குவரத்துக்கு விமானப் படை ஹெலிக்கொப்டர் வசதி மறுக்கப்படாமல் அவ்வப்போது பல தடவைகள் வழங்கப்பட்டன.

இப்போது அதை வேண்டுமென்றே ஒரு பெரிய விவகாரமாக்கி, அந்த வசதியை வழங்க மறுத்து, அதன்மூலம் புலிகள் மீதான தனது விரோத மனப்பான்மையை வெட்ட வெளிச்சமாக வெளிப்படுத்தியிருக்கின்றது மஹிந்தரின் அரசு.

ஒரு புறம், சாதாரண ஹெலிக்கொப்டர் வசதி கூட வழங்கப்பட முடியாத எதிரியாக விடுதலைப் புலிகளை நடத்தும் பகையுறவுப் போக்கு -

மறுபுறம் ஒட்டுப்படை நடவடிக்கைகள் மூலம் தொடரும் நிழல் யுத்தம் -

இன்னொரு புறம் தமிழர்களுக்கு எதிரான இனவன்முறைக் கொடூரத்தைக் கட்டவிழ்த்து பேரினவாதம் புரியும் அராஜகம் -

இவை போதாதென்று விடுதலைப் புலிகளைத் தடை செய்யக் கோரி அவர்களுக்கு எதிராக இலங்கை அரசின் நிர்வாக இயந்திரம் சர்வதேச ரீதியில் முழு மூச்சுடன் முடுக்கி விட்டிருக்கும் சூறாவளி பிரசாரம் -

இவ்வளவையும் ஏமாளிகள் போல் பார்த்துக்கொண்டு வாளாவிருந்து விட்டு பேச்சு மேசைக்குப் புலிகள் செல்ல வேண்டும் என எதிர்பார்க்கின்றதா சர்வதேச சமூகம்?

அமைதிப் பேச்சுகள் - சமாதான முயற்சிகள் - ஆக்கபூர்வமான திசையில் முன்னெடுக்கப்பட வேண்டுமானால் அதற்கு ஒரே வழிதான் உண்டு. அதைத் திரும்பத் திரும்ப இப்பத்தியில் பலதடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம்.

போர், சமாதானம் என்ற இரண்டு தோணிகளில் கால் வைத்துக் கொண்டு அமைதிப் பயணத்தை முன்னெடுக்க முடியாது. அதைத் தென்னிலங்கை அரசுத் தலைமை முதலில் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளுக்கு முன்னால் நந்தியாக யுத்தவாதிகளையும், பேரினவாதிகளையும் தென்னிலங்கை அரசுத் தரப்பு நிறுத்தி வைத்திருக்கும் வரையில் அமைதி முயற்சிகள் முன்நகரப் போவதில்லை என்பது நிச்சயம்.

அமைதிப் பேச்சுக்களுக்கான பொருத்தமான புறச்சூழல் ஏற்படுவதற்கு இந்த யுத்த வெறியர்களும், பேரினவாதத் தீவிரவாதிகளும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதும் உறுதி.

சமாதான எத்தனங்களுக்குக் குறுக்கே நிற்கும் இந்த நந்திகளை விலக்கி வைத்து, சமாதான தரிசனம் கிட்டுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் பொறுப்பு மஹிந்தருடையது. செய்வாரா அவர்?

## தபால் மூல வாக்கு விண்ணப்பம் தாமதம் ஏன்? அதிகாரிகளிடம் விளக்கம் கோரப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.20

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால்மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை உரிய காலத்தில் சமர்ப்பிக்கத் தவறிய திணைக்களத்தலைவர்கள் மற்றும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களிடம் தேர்தல் திணைக்களம் விளக்கம் கோரியுள்ளது.

இது தொடர்பாக யாழ்.தேர்தல் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவிக்கையில்:-

யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் 439 தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் தாமதமாகக்கிடைத்திருந்தன. இதற்கான காரணம் குறித்து ஆராய்ந்தபோது ஒருசிலவற்றைத் தவிர ஏனையவை அனைத்தும் விண்ணப்பதாரிகளால் உரிய அதிகாரிகளிடம் 3, 4 நாள்களுக்கு முன்னரே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவ்விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்தி அனுப்பிவைக்கும் அலுவலர்களே தாமதமாகத் தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர். அதாவது, திணைக்களத் தலைவர்களும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களும் தமது தேர்தல் கடமைகளை உரியமுறையில் செய்யவில்லை.

இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று அல்லது சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும். இவர்களிடம் உரிய விளக்கங்களைக் கோரியுள்ளேன்.

தமது வாக்குரிமை மறுக்கப்பட்டதாகத் தெரிவித்து வாக்காளர்கள் அந்த அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முயன்றால் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரும் தேர்தல் விதிகளுக்கமைவாகத் தனது கடமையை நிறைவேற்றாதிருந்ததால் குற்றவாளிகளாகக் கூடிய சாத்தியம் உண்டு என்றார்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால்மூலம் வாக்களிப்பதற்கென ஆயிரத்து 944 வாக்காளர்கள் விண்ணப்பித்து ஆயிரத்து 770 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை தெரிந்ததே. (ஒ-202-204)

## அராலியில் கோயில் குடமுழுக்கு




வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனத்தால் அராலியில் நிறுவப்பட்ட சிறிய வைரவர் ஆலயம் இன்று குடமுழுக்குச் செய்து திறந்துவைக்கப்படவுள்ளது. கடந்த மார்ச் 2ஆம் திகதி வடபிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனத்தால் கையளிக்கப்பட்ட 8ஆவது வீடு அமைந்துள்ள பகுதியிலுள்ள மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தச் சிறிய ஆலயம் அமைக்கப்பட்டு இன்று குட முழுக்கு நீராட்டு இடம்பெறுகின்றது. கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த செவ்வாய் அன்று அக்கிராமத்திலுள்ள சிறுவர்கள், பெரியோர்கள் உட்பட 300 இற்கு மேற்பட்டோரை இணைத்து அக்கிராமத்தைச் சுற்றி இறை நாமங்களை இசைத்து நகர சங்கீர்த்தனமும் செய்யப்பட்டது. வைரவர் கோயிலின் முன்னைய தோற்றத்தையும் தற்போதைய தோற்றத்தையும் படங்களில்காணலாம். (ஐ)

## அடுத்த வாரம் மூன்று தினங்கள் விஞ்ஞான சங்கத்தின் மாநாடு

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் 14ஆவது வருடாந்த மாநாடு எதிர்வரும் 26,27 மற்றும் 28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வருடம் பேராசியர் பாலசுப்பிரமணியம் 'தங்கவிருது' களனி பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி தாபுரூ அவர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

இவ்வருட மாநாட்டின் பிரதம அதிதியாகவும் கலந்துகொள்ள இருக்கும் பேராசியர் தாபுரூ 'தாவரங்களிலிருந்து மருந்துகள்' (From Plants To Pharmaceuticals) எனும் தலைப்பில் விசேட சொற்பொழிவாற்றவுள்ளார். இது தவிர இவ்வருட கருப்பொருளான "Disability" என்பதனை ஆய்வு செய்யப் பேராசிரியர் என்.நித்தியானந்தன், பேராசிரியர் வி.கே.சிவநாதன் திருமதி விஜிதா சத்தியகுமார் மற்றும் கலாநிதி என்.சிவராஜா ஆகியோர் முன்வந்துள்ளனர். தொடர்ந்து பல பிரசித்தமான கட்டுரைகள் வாசிக்கப்படும். சொற்பொழிவுகளும் நடைபெறவிருக்கின்றன. அனைத்து ஆர்வலர்களையும் யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கம் இந்த மாநாட்டுக்கு அழைத்துள்ளது. (ஐ)

### நாளை

சித்திரை 08
வெள்ளிக்கிழமை
21.04.2006
திதி: அட்டமி
பிற்பகல் : 05.20 வரை
நட்சத்திரம் : உத்தராடம்
முற்பகல் : 11.38 வரை
சுபநேரம் : 06.01 - 07.31
ராகுகாலம் : 10.31 - 12.01

### உதயவாக்கு

ஒருவனின் முட்டாள்தன்மை இன்னொருவனுக்கு அதிர்ஷ்டமாகிவிடுகின்றது.

- பிரான்சிஸ் பேக்கன்

## ஓய்வூதிய முரண்பாடுகள் தொடர்பான சுற்றறிக்கை

கடந்த 1996 டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்று ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓய்வூதிய முரண்பாடுகளை அகற்றுவதற்கான சுற்றறிக்கை பிரதேச செயலகங்களுக்கு ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளரினால் அனுப்பப்பட்டுள்ளது.

இச்சுற்றிக்கையின்படி 1996 டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்கள் 1997 ஜனவரி முதலாம் திகதிக்கு குறிப்பிட்ட சம்பளத் திட்டத்தில் இருந்ததாகக் கருதி அவ்வடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிட்டு திருத்தியமைக்கப்படவுள்ளது. 2006 ஜனவரி முதலாம் திகதிக்குரிய ஓய்வூதியம் கணிப்பிடப்பட்ட பிறகு மொத்த அதிகரிப்புகளும் இரண்டு கட்டங்களில் வழங்கப்படவுள்ளன. மொத்த ஓய்வூதிய அதிகரிப்பின் 50 வீதம் 2006 ஜனவரி தொடக்கமும் மிகுதி 50 வீதம் 2007 ஜனவரி தொடக்கம் வழங்கப்படவுள்ளன. 2006 ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னருள்ள காலப்பகுதிக்கு ஓய்வூதிய நிலுவை வழங்கப்படமாட்டாது என சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-117)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை உலுக்கும் புத்தூர் படுகொலைகள்...


சம்பவ இடத்தைப் பார்வையிடும் நீதவான்...




கண்காணிப்புக் குழுவினர்...


சடலம் ஒன்றின் தலையில் சூட்டுக் காயம்...

படங்கள்: பிரபா, நேசன்



இறந்தவர்கள் பயணித்த ஓட்டோ...


இறந்தவர்களில் இருவரின் சடலங்கள்...


இழுத்துச் சென்ற இரத்தக் கறை


அதிர்ச்சியில் ஊரவர்கள்...


உறவினர்கள் கதறல்...

## இராணுவத்தினரால் கொலை அச்சுறுத்தல் என்று மனித உரிமைக் குழுவிடம் மாணவர் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.20

இராணுவத்தினரால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒருவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளார்.

உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத் தலைவர் சின்னப்பு சுகந்தன் என்பவரே இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் அத்துமீறி நுழைந்து இருபதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் என்னைத் தாக்கி காயப்படுத்தி கொலை செய்ய முயன்றார்கள் மாணவர்களின் தலையீட்டைத் தொடர்ந்து தமது செயலைக் கைவிட்டு அவர்கள் வெளியேறினார்கள். தற்போது மீண்டும் நான் தங்கியிருக்கும் முகவரியை இராணுவத்தினர் விசாரித்து வருகின்றனர். அத்துடன், என்னுடன் கற்கும் மாணவர்களிடம் எனது முகவரி உட்பட எனது நடமாட்டம் சம்பந்தமாக விசாரித்து வருகின்றார்கள்.

இத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இயங்கும் மக்கள் வங்கிக்குச் சென்ற போது என்னைத் தாக்கிய இராணுவ வீரர்களில் ஒருவரான ஜகீத் என்ற இராணுவ வீரர் என்னிடம் வந்து நீ செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து என் மீது விசாரணை இடம்பெறுகின்றது. இதில் நான் பாதிக்கப்பட்டால் உன்னை வந்து கொலை செய்துவிட்டுத்தான் எனது இடத்திற்குச் செல்வேன் எனப் பயமுறுத்தியுள்ளார். - என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-86)

### உதவிப் பணக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவை பெற்று வருபவர்களுக்கு ஏப்ரல் மாதத்திற்கான கொடுப்பனவு தபாலகங்களுக்கு பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக் கொடுப்பனவை பெற்றுவருவோர் தத்தமது பகுதி தபாலகத்துடன் தொடர்புகொள்ளலாம். (ஒ-135)

## நாட்டில் நேரம் மாறிவிட்டது அலுவலகங்களில் மாறவில்லை

குருநகர்,ஏப்.20

இலங்கையின் நியம நேரம் கடந்த 14ஆம் திகதி தொடக்கம் மாற்றப்பட்டுவிட்டது. ஆனாலும், யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச அலுவலகங்கள் சில தற்போதைய நேர மாற்றத்தின்படி இயங்காமல் பழைய நேரத்தின்படியே இயங்கி வருகின்றன.

நேரமாற்றம் தொடர்பான சுற்றறிக்கை அலுவலகங்களுக்கு இதுவரை பொதுநிர்வாக அமைச்சால் அனுப்பி வைக்கப்படாததால் வழமைபோன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4.45 மணிவரையில் அலுவலகங்கள் இயங்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-51)

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களது பணி மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

எரிபொருள் விநியோகத்தில் ஈடுபடும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய ஊழியர்கள் மீண்டும் தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள எரிபொருள் களஞ்சியத்துக்கு ஊழியர்கள் செல்வதற்கு இராணுவத்தினரின் 'டிரக்' வாகனத்திலேயே செல்லவேண்டும் என்ற நடைமுறையை படையினர் அறிவித்திருந்தனர்.

இராணுவ வாகனத்தில் பயணிக்க அச்சமடைந்த ஊழியர்கள் கடந்த 12ஆம் திகதி கடமைக்குச் செல்லாமல் புறக்கணித்தனர்.

அத்துடன், அன்றைய தினம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.மாவட்ட பொது முகாமையாளரைச் சந்தித்து தமது தரப்புப் பிரச்சினையை எடுத்து விளக்கினர்.

பிரச்சினையைக் கேட்டறிந்த பொது முகாமையாளர் உடனடியாக காங்கேசன்துறை இராணுவ முகாம் படைத் தளபதியைச் சந்தித்து ஊழியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார். இதனையடுத்து இராணுவ வாகனத்தில் ஊழியர்களை ஏற்றிச் செல்லும் நடைமுறை ரத்துச் செய்யப்பட்டது.

இதனையடுத்து ஊழியர்கள் கடந்த 13ஆம் திகதி முதல் கடமைக்குத் திரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-13)

## கத்தரிச் செடிகளில் கிருமித்தாக்கம் சங்குவேலி விவசாயிகள் கவலை

வலி. தென்மேற்கு, ஏப்.20

சங்குவேலிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கத்தரிச் செய்கை புழு மற்றும் கிருமித் தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நீண்டகாலமாக சங்குவேலிப் பகுதி விவசாயிகள் பலரும் கத்தரிச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இம்முறை பயிரிடப்பட்ட கத்தரிச் செடிகளின் காய்களில் முன் எப்போது மில்லாதவாறு புழுக்குத்தல் நோய் ஏற்பட்டு கிருமிகளின் தாக்கம் ஏற்பட்டதால் காய்கள் யாவும் அழிந்துவருவதாக கத்தரிச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனைக் கட்டுப்படுத்துவதற்காக கிருமி நாசினி வகைகளை தெளி கருவி மூலம் தெளித்தும் உரிய பயன் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கத்தரிச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பயிரில் உரிய பலன் கிடைக்காமையால் அவற்றை அழித்துவிட்டு மரவெள்ளி மற்றும் வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கு முன்வந்துள்ளனர்.

இங்குள்ள சந்தைகளில் வழமையாக இம் மாதத்தில் விலை வீழ்ச்சியடையும் கத்தரிக்காய்கள் இம்முறை அதிகரித்த விலையில் விற்கப்படுகின்றன. (ஒ-135) (27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நேரத்தில்தான் அரிசி பற்றி நினைப்பா? கருணாநிதி, ஜெயலலிதாவிடம் சுஷ்மா கேள்வி

கோயம்புத்தூர்,ஏப்.20

ஆட்சியில் இருந்தபோதெல்லாம் மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் தேர்தல் நேரத்தில் அரிசி பற்றிய அறிவிப்புகளை அ.தி.மு.கவும் தி.மு.கவும் போட்டி போட்டு அறிவிப்பது ஏன்?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் பாரதிய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் சுஷ்மா சுவராஜ்.

கேரள மாநில சட்டசபை தேர்தல் பிரசாரத்துக்காக, சுஷ்மா சுவராஜ் மும்பையிலிருந்து விமானம் மூலம் கோவை வந்தார். கோவை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

நீண்ட நாள்களுக்குப் பின், தி.மு.க., அ.தி.மு.க., கூட்டணியில் இல்லாமல், தமிழகத்தில் தேர்தலைச் சந்திக்கிறோம். பா.ஜ.க., தலைமையில் 24 கட்சிகள், 228 தொகுதியில், பா.ஜ.க., சின்னத்தில் தேர்தலைச் சந்திக்கின்றன. இம்முயற்சி மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

கடந்த தேர்தலில் நான்கு இடங்களில் வெற்றி பெற்றோம். வரும் தேர்தலில், பா.ஜ.க., மட்டும் குறைந்தது 10 தொகுதிகளிலாவது வெற்றிபெறும். தமிழகத்தில் ஆட்சி அமைப்பதற்கான அடித்தளத்தை! இந்தத் தேர்தலில் அமைக்கிறோம். எங்கள் கொள்கைகளும் சின்னமும் தமிழகத்தின் மூலை முடுக்குகளைச் சென்றடையும்.

தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளும் ஆட்சியில் இருந்துள்ளன. அப்போது அரிசி பற்றி எதுவும் அறிவிக்காமல், தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகள் அளிப்பது ஏன்? தேர்தல் நேரத்தில் மட்டும் இக்கட்சிகள் இதைப்பற்றி நினைப்பது ஏன்?

ரத யாத்திரை செல்வதால், கட்சியின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், ரத யாத்திரையில் விளக்கப்படுகிறது.

- இவ்வாறு சுஷ்மா சுவராஜ் கூறினார்.

தமிழகத்தில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பத்துக்கு பங்கீட்டு அட்டைக்கு மாதாந்தம் இருபது கிலோ அரிசி கிலோவுக்கு மூன்று ரூபா ஐம்பது பைசா (இந்திய மதிப்பில்) வீதம் வழங்கப்படுகிறது.

இந்த அரிசியை தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் 2 ரூபாவுக்கு வழங்குவதாகக் கருணாநிதியும் -

இந்த அரிசியில் 10 கிலோ அரிசியை அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இலவசமாக வழங்குவதாக ஜெயலலிதாவும் - தேர்தல் வாக்குறுதி வழங்கியுள்ளனர்.

இதேவேளை, 'கிலோ அரிசி 2 ரூபா' என்ற கருணாநிதியின் வாக்குறுதி மக்களிடம் வரவேற்புப் பெற்றதாலேயே ஜெயலலிதா 'இலவச அரிசி' வாக்குறுதியை வழங்கினார் என்றும் கூறப்படுகிறது. (ஒ)

## ஹண்டேயின் எளிமை

அண்ணா நகர் தொகுதியில் தி.மு.க., ம.தி.மு.க. வேட்பாளர்களுக்கு இடையே பாரதிய ஜனதா வேட்பாளர் எச்.வி.ஹண்டே ஆர்ப்பாட்டம் இல்லாமல் ஆதரவு சேகரிக்கிறார்.

மற்றைய வேட்பாளர்கள் தாரை, தப்பட்டை, வாத்திய படையுடன் வாகனங்களில் சென்று ஆதரவு கேட்க 78 வயதான ஹண்டே மட்டும் விதிவிலக்காக நடந்தே சென்று மக்களை சந்திக்கிறார்.

எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போது, அவரது அ.தி.மு.க. சார்பில் கருணாநிதியை எதிர்த்துப் போட்டியிட்டவர் எச்.வி. ஹண்டே என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## குடிகாரர்கள் சங்கம் பா.ஜ.கவுக்கு ஆதரவு

கன்னிவாடியில் குடிகாரர்களுக்கு என்றே தனிச் சங்கம் தொடங்கப்பட்டுள்ளது. அதற்கான கூட்டம் சங்கத் தலைவர் முத்துசாமி தலைமையில் இடம்பெற்றது. உறுப்பினர்கள் 50 பேர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

வருகிற சட்டமன்றத் தேர்தலில் சங்கத்தினர் அனைவரும் பாரதிய ஜனதாக் கட்சிக்கு ஆதரவு தெரிவிப்பது, வாக்குப் பதிவுத் தினத்தன்று காலை முதல் மாலைவரை குடிக்கக் கூடாது,

அரச மதுக் கடைகளில் நாங்கள் விரும்பும் வகைகளை விற்பனை செய்யவேண்டும், அதிகாரிகள் விருப்பத்துக்கு மாற்றி மாற்றி விற்பனை செய்யக்கூடாது. மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ஒ)

இந்தியச் செய்திகள்

# முன்னாள் தி.மு.க. அமைச்சர் நேருவின் மொத்தச் சொத்து மதிப்பு ரூ. 2.84 கோடி

திருச்சி தொகுதி தி.மு.க. வேட்பாளரும், மாவட்ட தி.மு.க. செயலாளருமான நேரு ரூ.2.84 கோடிக்கு சொத்து மற்றும் மோட்டார் வாகனமாக கதிர் அறுப்பு இயந்திரம் மட்டுமே இருப்பதாக, பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் வேட்புமனு தாக்கல் செய்தார்.

அந்த மனுவோடு அளித்த பிரமாண பத்திரத்தில் கையிருப்பாக 2 லட்சம் ரூபாவும் வங்கிகளில் மொத்தம் 12 லட்சத்து 15 ஆயிரத்து 512ரூபா 36 பைசாவும் உள்ளது.

மனைவி சாந்தா பெயரில் ரூ.50 ஆயிரம் காப்புறுதியும் 125 பவுண் நகை உட்பட மொத்தம் ஒரு கோடியே 42 லட்சத்து 54 ஆயிரத்து 966 ரூபா 85 பைசா உள்ளது.

மகன் அருண் பெயரில் மொத்தம் ஒரு கோடியே 2 லட்சத்து 27 ஆயிரத்து 150 ரூபா 87 பைசா உள்ளது.

திருச்சி லால்குடி தாலுகா கானக்கிளிய நல்லூரில் ஓட்டுக்கட்டிடம் மற்றும் கூட்டுப்பட்டாவில் வீடு மதிப்பு ரூ.75 ஆயிரம், அதே ஊர் மற்றும் லால்குடி சிறுதையூரில் புஞ்சை நிலம், கைலாசநாதஸ்வாமி கோயில் நிலம் உட்பட பல நிலங்களில் குத்தகை பாத்தியம் என நேரு பெயரில் ரூ.19 லட்சத்து 96 ஆயிரத்து 292, மனைவி சாந்தா பெயரில் ரூ.6 லட்சத்து 64 ஆயிரத்து 236.50 பைசா, மகன் அருண் பெயரில் ரூ.29 ஆயிரத்து 360க்கு சொத்து உள்ளது.

தானிய உடைப்பு வாகனத்துக்கு ரூ.57 ஆயிரத்து 372.08 பைசா, கரும்பு வளர்ச்சிக்கு ரூ.15 ஆயிரத்து 798.45 பைசா என மொத்தம் ரூ.73 ஆயிரத்து 170.53 பைசாவுக்கு எஸ்.பி.ஐ. வங்கியில் கடன் பெற்றுள்ளதாக கணக்கு காண்பித்துள்ளார்.

மோட்டார் வாகனமாக ரூபா 75 ஆயிரம் மதிப்பில் கதிர் அறுப்பு இயந்திரம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். கடன் தவிர்த்து அவர் மற்றும் அவரது மனைவி மற்றும் மகன் பெயர்களில் ரூபா 2 கோடியே 84 லட்சத்து 60 ஆயிரத்து.639.11 பைசாவுக்கு சொத்து உள்ளதாகக் கணக்கு காண்பித்துள்ளார். இப் பெறுமதிகள் யாவும் இந்திய ரூபா மதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நடிகர் நெப்போலியனின் நெருங்கிய உறவினரான கே.என்.நேரு தி.மு.க. ஆட்சியின் போது அமைச்சராக இருந்தவர். தற்போதைய அ.தி.மு.க. ஆட்சியில் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்தார் என்று இவர் மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.(ஒ)

## வேட்புமனுத்தாக்கல் இன்று கடைசிநாள்

சென்னை,ஏப்.20

தமிழக சட்டசபைத் தேர்தல் வேட்புமனுத்தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் இன்றுடன் முடிவடைகிறது. கடந்த 13 ஆம் திகதி வேட்பு மனுத்தாக்கல் ஆரம்பமானது.

நேற்றுவரை ஆயிரத்து 356 வேட்பாளர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். தேர்தல் ஆணையத்தின் பணிப்பிற்கிணங்க வேட்புமனுக்களுடன் வேட்பாளர்களின் குடும்பச் சொத்து விவரமும் சமர்ப்பிக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (ஒ)

## கம்யூனிஸ்ட் வேட்பாளரின் சொத்து ரூ. 94.15 மட்டுமே

தமிழகத்தின் திருச்செங்கோடு தொகுதியில் வேட்புமனுத் தாக்கல் செய்த மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி வேட்பாளர் தேன்மொழிக்கு 94 ரூபா 15 பைசா மட்டுமே சொத்து இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் பத்து வேட்பாளர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர். நாமக்கல் தொகுதிக்கு சுயேச்சை வேட்பாளர் விஜயா வேட்பு மனுத் தாக்கல் செய்தார். சங்ககிரி தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் ஈஸ்வரன் கட்சியினருடன் சென்று வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.

திருச்செங்கோடு தொகுதியில், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி வேட்பாளர் தேன்மொழி (வயது 45) நேற்றுமுன்தினம் வேட்பு மனுத் தாக்கல் செய்தார். அவரது வேட்பு மனுவில் இருந்த சொத்து மதிப்பு பற்றிய விவரத்தைக் கண்டு அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். அவரிடம் கையிருப்பு ரொக்கமாக ரூ. 94.15 மட்டுமே இருப்பதாக தெரிவித்துள்ளார்.

தனக்கு வேறு சொத்துக்கள் இல்லை என்றும், வாகனம், வீடு, நிலம் எதுவும் இல்லை என்றும் வேட்பு மனுவில் தெரிவித்துள்ளார்.(ஒ)

தேர்தல் பிரசாரத்துக்காக கேரள மாநிலம் கோட்டயத்துக்கு வந்த காங்கிரஸ் தலைவி சோனியா காந்திக்கு வரவேற்பு.



# கைவிலங்குடன் ஜெயேந்திரர் படம் அமைச்சர் உட்பட ஐவர் மீது வழக்கு

காஞ்சிபுரத்தில் ஜயேந்திரர் கைவிலங்கோடு இருப்பது போல் வைக்கப்பட்ட பதாகை தொடர்பாக கைத்தறித்துறை அமைச்சர் சோமசுந்தரம் உட்பட 5 பேர் மீது பொலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாளை முன்னிட்டு கடந்த பெப்ரவரி மாதம் காஞ்சிபுரத்தில் மடாதிபதி ஜயேந்திரர் கைவிலங்கோடு இருப்பது போலவும், அதை முதல்வர் ஜெயலலிதா பார்ப்பது போலவும் படங்கள் இடம்பெற்றிருந்தன.

அந்த பதாகையில் கைத்தறித்துறை அமைச்சரும் மாவட்டச் செயலருமான சோமசுந்தரம், உட்பட ஐவரின் பெயர்கள் இடம்பெற்றிருந்தன.

குறிப்பிட்ட அந்த படத்தால் இந்துக்கள் மனது புண்பட்டுள்ளது என்றும், சங்கரமடம் பக்தர்களுக்கு மிகுந்த அதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் கூறி புலவர் மகாதேவன் என்பவர் நீதிமன்றத்தை அணுகினார். நீதிமன்ற உத்தரவுப்படி அமைச்சர் உட்பட ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினர் மைதிலி திருநாவுக்கரசு என்பவரும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

(ஒ)(39)

# அரசியல்வாதிகளாகும் குண்டர்கள்

தமிழக அரசியலில் வேட்பு மனுத்தாக்கல் தொடங்கிவிட்டதால் பிரசாரம் சூடு பிடித்துள்ளது.

முக்கிய பிரமுகர்கள் , நடிகர்- நடிகைகள் பிரசாரம் செய்வதால் அவர்களைச் சுற்றி தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சிலர் கூட்டத்தைக் காட்டுவதற்காக பணம் கொடுத்து ஆள்களை வரவழைக்கின்றார்கள். சென்னை மற்றும் புறநகரைச் சேர்ந்த குண்டர்கள் பலர் தங்களது உடைகளை அரசியல்வாதிகள் போன்று மாற்றிக்கொண்டு பிரசாரத்தில் ஈடுபட்டு வரு கின்றார்கள்.


இது பற்றி துரைபாக்கத்தைச் சேர்ந்த குண்டர் ஒருவர் கூறுகையில், தேர்தல் நேரத்தில் பொலீஸில் பிடிபட்டால் குண்டர் சட்டத்தில் உள்ளே தள்ளி விடுவார்கள். ஓர் ஆண்டுக்கு வெளியே வரமுடியாது. இதனால்தான் அரசியல்வாதியாக மாறிக்கொண்டேன். தினமும் காலைமுதல் மது, பிரியாணி என்று சொகுசாக இருக்கிறேன் என்னுடன் சேர்ந்து 30 இற்கும் மேற்பட்டவர்கள் உடன் வருகிறார்கள். இரவுவரை பிரசாரம் செய்ய கார் மற்றும் இரவில் பணமும் கிடைப்பதால் கொண்டாட்டம்தான் - என்று கூறினார்.

சென்னையைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதி கூறியதாவது:-

பிரசாரத்திற்கு மக்களிடம் நேரில் செல்லும்போது எதிர்க்கட்சியினர் சிலர் பொது மக்கள் என்ற போர்வையில் எங்களை முற்றுகையிடத் திட்டமிடுகிறார்கள். இதை குண்டர்கள் பாதுகாப்புடன் தடுக்கமுடிகிறது. தனிக் கார், பிரியாணி, மது என்று கொடுத்து விட்டால் போதும் நன்றாக கவனிக்கிறார்கள். மேலும் அவர்கள் பொலீஸ் தேடுபிடியில் இருந்து தப்பிக்க இது [illegible] அரசியல் முக மூடி போட்டுக் கொ[illegible] என்றார்.

(ஒ)(39)

# ரீ.வி. நடிகை தற்கொலை காதலனிடம் விசாரணை



சென்னை,ஏப்.20

ரீ.வி.நடிகை வைஷ்ணவி தற்கொலை செய்த சம்பவத்தில் அவரது தாயார் செய்த முறைப்பாட்டின் பேரில் காதலனிடம் பொலீஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

மனைவி, பெண்கள், முகூர்த்தம், மலர்கள் ஆகிய ரீ.வி. தொடர்களிலும் பாபா, விசில் போன்ற திரைப்படங்களிலும் சினிமாக்களிலும் நடித்தவர் நடிகை வைஷ்ணவி (வயது 22). சண் ரீ.வியில் கொண்டாட்டம் நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்கிய இவர் நேற்றுமுன்தினம் தனது வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் துப்பட்டாவால் தூக்குப் போட்டு தற்கொலை செய்துகொண்டார். இதுபற்றி அண்ணாநகர் பொலீஸார் பல்வேறு கோணங்களிலும் விசாரணை நடத்திவருகின்றனர்.

இந்த நிலையில் வைஷ்ணவியின் தாயார் ரஞ்சினி அண்ணாநகர் பொலீஸில் நேற்றுக் காலை ஒரு புகார் மனு கொடுத்தார். அதில் 'எனது மகளின் சாவில் சந்தேகம் உள்ளது. அவளை தேவானந்த் என்ற ரீ.வி. நடிகர் காதலிப்பதாகக் கூறி ஏமாற்றிவிட்டார்' என்று கூறியிருந்தார்.

இதையடுத்து பொலீஸார் தேவானந்தை பொலீஸ் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

[illegible]ில் நடித்தபோது வைஷ்ணவிக்கும் தேவானந்துக்கும் இடையே காதல் மலர்ந்ததாகக் கூறப்படுகிறது. தேவானந்துக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மண்ணில்!

முழுமையான கணக்கியல் -சார்
கணினிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றது.
பல்கலைக்கழக மாணவர்கள்,
உயர்தொழிநுட்ப மாணவர்கள்,
A/L நிறைவு செய்திருக்கும் மாணவர்கள்,
மற்றும் கணக்கியல் துறையில்
ஆர்வமுள்ளவர்களுக்கு, முதன் முதலாக,

## Diploma in Office Management

- AccPdc
- MYOB
- Tally
- Quick Books Premier

பதிவுகளுக்கு முந்துங்கள்!

பிரிவு I 20.04.2006 காலை 8.30
பிரிவு II 20.04.2006 மாலை 6.30

**CICS Computer Technologies**
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
E-mail: cicsjaffna@gmail.com

புத்தாண்டையும் விடுமுறையினையும் பயனுள்ளதாக்க
CICS உடன் இன்றே இணையுங்கள்!


# வடமராட்சியில் பாடசாலைகள் 8 மணிக்கு ஆரம்பம்

பருத்தித்துறை,ஏப்.20

வடமராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகள் அனைத்தும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிக்கு முடிவடையும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஒ-118)

# பொருளியல் பாட வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.20

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் இவ்வாண்டு தோற்றவுள்ள மாணவர்களின் நலன்கருதி நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் பொருளியல் பாட இலவச வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

ஆசிரியர் வே.கருணாகரன் நடத்தும் இந்தக் கருத்தரங்கு பிற்பகல் 3 மணி தொடக்கம், மாலை 6 மணி வரை நடைபெறுமெனவும் -

இதில் அடுத்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தோற்ற வுள்ள மாணவர் களும் பங்குபற்றிப் பயனடையலாம் என்றும் - வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (ஒ)

# சங்காபிஷேகம்

சுழிபுரம்,ஏப்.20

பண்ணாகம், விசவத்தனை முருகமூர்த்தி கோயில் நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகத்தை தொடர்ந்து சுவாமி வீதியுலா வருதல் நடைபெறும் அன்று நண்பகல் பண்ணாகம் ஸ்ரீ முருகன் அன்னதான சபையினர் அன்னதானம் வழங்கவுள்ளனர். (ஒ-28)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவை நிலையங்களின் வடபிராந்திய இணைப்புக் குழு சேவை அராலிப் பகுதியில் அமைத்துக் கொடுத்த ஸ்ரீ வைரவப் பெருமாள் ஆலயத்தின் கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி விக்கிரக பிரதிஷ்ட எண்ணெய்க் காப்பு ஆரம்பமாகி இன்று குடமுழுக்கு இடம்பெறுகிறது. (-202)

# முதலாவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் துணை



தவப்பேறு 03 - 07 - 1923 சிவப்பேறு 01 - 05 - 2005

## திருமதி கனகாம்பிகை நல்லையா

திதி: 20.04.2006

குப்பிளான் சைவபூஷணம் அமரர் கா. நல்லையா (மலாயன் பென்சனர்) அவர்களின் பிரியபத்தினி திருமதி கனகாம்பிகை நல்லையா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை.

ஈரநெஞ்சுடைய இனிய அன்னை
இமைப்பொழுதும் இறைபணி செய்த அன்னை
யாவர்க்கும் உணவளித்து உயர்வுகண்ட அன்னை
தீது இன்றி வாழ்ந்து திருவடி சென்ற நாளை
தினமும் வணங்குகிறோம்.

28, கைலாசபிள்ளையார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(49602)(32-15-45)

மகள், மருமக்கள், சகோதரர்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்.

# வலயக் கல்வி அலுவலகம் - தென்மராட்சி

## கேள்வி அறிவித்தல் - 2006

இலங்கை ஜனநாயக சோலிஷக் குடியரசின் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் (SIRUP II) - 2006 நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய வலயக் கல்விப்பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகின்றது.

1. ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும் இலங்கை சோசலிசக் கட்டட ஒப்பந்தகாரர் சங்கத்தின் அங்கத்தவராகவும் பதிவுப் புத்தகம் 2006ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல்வேண்டும்.
2. கேள்விப் பத்திரங்களின் பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல்வேண்டும்.
3. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப்பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து அல்லது இக் காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 20.04.2006ஆம் திகதியிலிருந்து 04.05.2006 ஆம் திகதி ந.ப. 12 மணிவரை தென்மராட்சிக் கல்வி வலய அலுவலக பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பாடசாலையின் பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கமுடியாத வைப்புப் பணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | யா/மட்டுவில் அ.மி.த.க. பாடசாலை இருமாடிக் கட்டடத்தின் கீழ் மாடியில் விஞ்ஞான ஆய்வு கூடம் நிர்மாணித்தல் (40" X 25") | 750.00 | 20,000/= | M8 |
| 02 | யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தி, இருமாடிக் கட்டடத்தின் கீழ் மாடியில் விஞ்ஞான ஆய்வு கூடம் நிர்மாணித்தல் (40" X 25") | 750.00 | 20,000/= | M8 |

4. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப் பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையில் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல்வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2006ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அன்றைய தினம் எமது அலுவலகத்தில் மு.ப 11.30 மணிக்கு கேள்விப் பத்திரப்பெட்டி திறக்கப்படும்.
5. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி. (சி/49007)(32-15-45)

திருமதி அ.வேதநாயகம்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் அன்னலட்சுமி



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அன்னலட்சுமி அவர்கள் 17.04.2006 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கனகசபை (இராசா பரியாரியார்) - செல்வரத்தினம் தம்பதியரின் மூத்தபுதல்வியும் பண்டிதர் சரவணமுத்து சுப்பிரமணியம் (ஆவரங்கால்) அவர்களின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி, வல்லிபுரநாதன், இராமநாதன், ஸ்ரீரங்கநாதன், மகாலட்சுமி ஆகியோரின் சகோதரியும் புனிதவதி (கொழும்பு), திலகவதி (யாழ்ப்பாணம்), சிவராமலிங்கம்(சுவிற்ஸர்லாந்து), நடராசலிங்கம் (சுவிற்ஸர்லாந்து), கமலவதி(கனடா) முத்துராசலிங்கம் (கனடா), சௌந்தரியவதி (கொழும்பு), திருவாதரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் மனோகரநேரு(கொழும்பு), கணேசபிள்ளை, தெய்வநாயகி (சுவிற்ஸர்லாந்து), ஜெயராணி (சுவிற்ஸர்லாந்து), செந்திவாசன் (கனடா), சந்திரவதனா (கனடா), நந்தகுமார் (கொழும்பு), பாப்னா (கனடா) ஆகியோரின் பாசமுள்ள மாமியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (இளைப்பாறிய கிராம சேவையாளர்), மாணிக்கவாசகர் மற்றும் சிவசோதி, சந்திரமலர், தம்பிராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரணவன், உமேசன், சாரங்கன், பிரசன்னா, சுதர்சன், நர்த்தனன், மாதங்கி, ஜனனி, சிந்தூரி, சுவேதா, ஸ்ரீராம், சரண்யா, குமாரசரண், பார்கவி, ஹரிப் பிரகாஷ், ஹைரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2006) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு 134, இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

134,இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5145 (49553)(32-45-15)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# சுனாமிக்குப் பின்னான சமூக அபிவிருத்தியும் மீள்கட்டமைப்பும்

care

## கெயர் சர்வதேசம் - யாழ்ப்பாணம் - 2006

## கேள்விப்பத்திரம்

கெயர் நிறுவனத்தினால் வல்வெட்டித்துறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வீட்டுத் திட்டத்திற்கு தேவைப்படும் பின்வரும் மூலப்பொருள்களை விநியோகிக்க பொருத்தமான விநியோகத்தரிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1) கண்ட கல்
2) சல்லி
3) கிறேசர் தூள்

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்கும் யாழ்ப்பாணத்திலுள்ள கெயர் அலுவலகத்துடன் காலை 8.30மணி தொடக்கம் பி.ப.4.30 மணி வரையான கடமை நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

விண்ணப்பமுடிவு திகதி: 27.04.2006

திட்டப்பணிப்பாளர்,
கெயர் சர்வதேசம், 15, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 - 222 9763 (சி/49005)(32-15-45)

# மரண அறிவித்தல்

## அருளானந்தம் ஸ்ரெலா (பவுண்)



இல.5A, பாஷையூர் சென் அன்ரனீஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் ஸ்ரெலா (பவுண்) அவர்கள் 11.04.2006 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கபிரியேல்பிள்ளை - மரியகன்னி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருளப்பு - மாகிறேற் தம்பதியரின் அன்பு மருமகளும் அருளானந்தம் அவர்களின் பாசமிகு மனைவியும் கீத்தாஞ்சலா (பிரான்ஸ்), ரெறன்ஸ் (ஜேர்மனி), பிறின்ஸ் (ஜேர்மனி), அலன்றொய்ஸ் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜோனதாஸ் (பிரான்ஸ்), தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியும் சில்வேஸ்ரர், சாள்ஸ் (டென்மார்க்), டெல்சி (ஜேர்மனி), ஆன்சல் (லண்டன்), மெறிட்டா யுஸ்ரின் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பிராயன் ஸ்பென்சர், மத்தேயு ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (20.04.2006) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

859/3, கோயில் ஒழுங்கை,
பாஷையூர், யாழ்ப்பாணம். (49603)(32-15-45)

தகவல்:
துரை குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இடிதாங்கிகள் எதுவும் இல்லை இடி மின்னல் தாக்கும் அபாயம்

## பாண்டியன்குளம், துணுக்காய் மக்கள் அச்சம்

கிளிநொச்சி,ஏப்.20

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன்குளம், துணுக்காய்ப் பிரதேசங்களில் இடிதாங்கிகள் இல்லாமையால் இடி மின்னல் தாக்கும் அபாயம் உள்ளதால் பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக இடியுடன் கூடிய பலத்த மழை பரவலாகப் பெய்துவருகின்றது. இந்தப் பிரதேசங்களுக்கென முன்னர் இருந்த இடிதாங்கி ஒன்று சேதடைந்து பல காலமாகியும் இதுவரை வேறு இடிதாங்கி எதுவும் பொருத்தப்படவில்லை.

அண்மைக் காலங்களில் மல்லாவி நகரில் இடிதாக்கியதில் இருவர் உயிரிழந்ததுடன் பலர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதால் பிரதேச மக்கள் இடி மின்னல் ஏற்படும் போது அச்சமடைந்துள்ளனர். (8-352-202)

# மணியங்குளம் ஊடாக வன்னேரிக்கு பஸ் சேவை

ஸ்கந்தபுரம்,ஏப்.20

மணியங்குளம் ஊடாக வன்னேரிக்கு பஸ் சேவையை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் மற்றும் பொது மக்களின் போக்குவரத்து இலகுபடுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அக்கராயன், ஸ்கந்தபுரம் பிரதேசங்களுக்கான பொது அமைப்புக்களின் சந்திப்பிலேயே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சந்திப்பு கரைச்சிப் பிரதேச செயலக உப பணிமனையில் அண்மையில் இடம்பெற்றது.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் நியாப் திட்டம்-I இன் கீழ் ஸ்கந்தபுரம் மேற்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளைத் துரிதகதியில் மேற்கொள்ளவும் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு வசதியாக வாய்க்கால், நீர்க் குழாய்கள் என்பவற்றைச் சீர் செய்யவும் அக்கராயன் கிழக்குப் பிரதேச பொது மைதானத்துக்குக் காணி வழங்குவதற்கும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கண்ணகைபுரம் 50 வீட்டுத் திட்டத்திற்குரிய காணி உறுதிகளை வழங்குவதற்கான காணிக் கச்சேரி நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதெனவும் ஸ்கந்தபுரம் வீதிகள் அகலப்படுத்திப் புனரமைப்பதெனவும் இக் கலந்துரையாடலில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (8-381-202)

# முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்து ஆய்வுக் கூட்டம்

பரந்தன்,ஏப்.20

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தியும் அதற்குத் தடையாகவுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் குறித்த கலந்துரையாடல் அண்மையில் முல்லைத்தீவு மாவட்டச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாவட்ட திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான ஒருங்கிணைப்புப் பொறுப்பாளர் யாழ் அமுதன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மாவட்டத்தின் சகல திணைக்களத் தலைவர்களும் கலந்துகொண்டு அபிவிருத்தியும் அதற்கான தடைகளும் குறித்துக் கருத்து வெளியிட்டனர்.

மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.பார்த்தீபன், மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன், மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் செ.முரளி, தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோரும் கருத்துரைகளை நிகழ்த்தினர். (8-352-202)

# அக்கராயன் பிரதேச எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு

ஸ்கந்தபுரம்,ஏப்.20

அக்கராயன் பிரதேச சேதிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு அண்மையில் அக்கராயன் இல.01, அ.த.க.பாடசாலையில் பேரவைத் தலைவர் சபாரெட்ணம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை பிரதேச தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவிப் பணிப்பாளர் கோ.நல்லையா, இளையோர் செயற்பாட்டுக் குழுத் தலைவர் சந்திரகுமார், ஊரக தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த பே.விஜயரட்ணம் ஆகியோர் ஏற்றினர். தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருள் ஏற்றினார்.

சமகால அரசியல் பற்றி அரசியல் போராளி சி.பசுபதிப்பிள்ளை கருத்துரை நிகழ்த்தினார். தொடர்ந்து கிராமங்களின் பிரச்சினைகள் குறித்து அறிக்கைகளை ஊரக எழுச்சிப் பேரவைச் செயலாளர்கள் வாசித்துச் சமர்ப்பித்தனர்.

இந்நிகழ்வில் இளையோர் செயற்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் தமிழ்ப்பிரியன், நிர்வாக சேவையைச் சேர்ந்த சுதன், அக்கராயன் கிராம அலுவலர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (8-381-202)

# வீடமைப்புத்திட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சிகள்

கிளிநொச்சி,ஏப்.20

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.


கடந்த 8ஆம் திகதி கரைச்சிப் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வ.சத்தியசீலன் தலைமையில் இப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (8-307-20 2)

# சுயதொழில் மானிய உதவி

பரந்தன்,ஏப்.20

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடனும் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம் சுயதொழில் மானிய உதவியை வழங்கிவருகின்றது.

அக்கராயன் பிரதேசத்தைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கு 8 லட்சத்து 55 ஆயிரம் ரூபா நிதி இத் திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. (8-352-202)



கிளிநொச்சி கரடிப் போக்குச் சந்திக்கு அருகேயுள்ள குளத்திலிருந்து பரந்தன் மற்றும் உருத்திரபுரம் பகுதிகளின் விவசாயத் தேவைகளுக்கு தண்ணீர் செல்லும் பிரதான வாய்க்காலைப் படத்தில் காணலாம். இதில் வாகனங்களை கழுவுவதால் நீர் அழுக்கடைவதுடன் பயிர்ச்செய்கைக்கு ஊறு விளைவிப்பதாகவும் அமைக்கிறது. அத்துடன், குடிதண்ணீராகவும் இந்த வாய்க்கால் தண்ணீர் பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே, வாய்க் காலில் சுகாதாரச் சீர்கேடு இடம்பெறாது சம்பந்தப்பட்டவர்கள் கவன மெடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோருகின்றனர். (படம்: பரந்தன் செய்தியாளர் )

# நாகபடுவான் நெல் வயல்கள் உவர் நிலமாக மாறும் அபாயம்!

கிளிநொச்சி,ஏப்.20

கரியாலை, நாகபடுவான் குளத்தின் கீழ் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்கள் உவர் நிலமாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது என கரியாலை நாகபடுவான் கமக்கார அமைப்புத் தலைவர் ஆ. இராசரத்தினம் தெரிவித்துள்ளார்.

இக் குளத்தின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் நிலங்களின் மண்ணைப் பரிசோதனைக் குட்படுத்த சம்மந்தப்பட்ட திணைக்களத்தினர் மண் மாதிரிகளைக் கொண்டு சென்று நீண்டகாலமாகியும் இது வரை பரிசோதனை அறிக்கைகள் வரவில்லை.

காலஞ்செல்லச் செல்ல இந்த நிலத்தின் உவர்த்தன்மை அதிகரித்து வருகின்றது. எனவே, அறிக்கையைச் சம்பந்தப்பட்டவர்கள் உடன் சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்க ஆவனசெய்யவேண்டும் - என அவர் மேலும் தெரிவித்தார். (8-307-202)

# முல்லை.மாவட்ட தமிழ்ச்சங்கம் நடத்திய போட்டி முடிவுகள்

கிளிநொச்சி,ஏப்.20

முல்லைத்தீவு மாவட்ட தமிழ்ச் சங்கம் மாவட்ட மட்டத்திலான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள் மனனப் போட்டிகளை அண்மையில் நடத்தியது.

இப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் மனனப் போட்டிகள்.

முதலாம் பிரிவு:-

சி.கௌசிகன் (மாங்குளம் ம.வி.), க.நிதர்சனா (செம்மலை ம.வி.), தி.தரணிகா (துணுக்காய் அ.த.க.பாடசாலை).

இரண்டாம் பிரிவு:-

கி.பிரியங்கன் (யோகபுரம் ம.வி.), நா.அச்சுதன் (யோகபுரம் ம.வி.), அ.புனிதா (மாங்குளம் ம.வி.).

**திருக்குறள் மனனப் போட்டிகள்**

மூன்றாம் பிரிவு :-

அ.தேம்பாஜினி (ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.), ச.தேனுகா (துணுக்காய் அ.த.க.பாடசாலை), த.மிதுஜினி (துணுக்காய் அ.த.க.பாடசாலை).

நான்காம் பிரிவு:- ம.மரியவிஸ்ரா (குமுழமுனை ம.வி.), ம.திலீபனா (ஐயங்கன்குளம் அ.த.க.பாடசாலை), ஆ.கம்சனா (புதுக்குடியிருப்பு ம.வி.). (8-307-202)

# பூநகரி முடக்கனாறுப் பகுதியில் புனரமைப்புப் பணி விரைவில்

கிளிநொச்சி,ஏப்.20

பூநகரிப் பிரதேசத்திலுள்ள முடக்கனாறு புனரமைப்புப் பணிகளை நீர்ப்பாசனத் திணைக்களம் ஆரம்பிக்கவுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற பயிர்ச்செய்கை தொடர்பான கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

பூநகரிப் பிரதேசசெயலர் மா.சிறீஸ்கந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் குடக்கனாற்றைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் பெருமளவான விவசாயிகள் பயனடைவர் என்றும் இந்த ஆறு பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் உள்ளதால் நீர்ப்பாசனத் திணைக்களம் விரைவில் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (8-307-202)

# பண்டிவெட்டக்குளத்தைப் புனரமைக்க ஐந்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

பரந்தன்,ஏப்.20

பூநகரி பண்டிவெட்டக் குளத்தின் வான்பகுதியின் புனரமைப்பிற்கென 5 லட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புனரமைப்புப் பணிகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பூநகரிப் பிரதேச பயிர்ச் செய்கைக் கூட்டத்தில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் குளத்தின் கீழ் பல விவசாயிகளால் நெற்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வான்பகுதியின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டால் குளத்தின் வரம்புகள் பாதுகாக்கப்படுவதோடு விவசாயிகளும் நன்மை அடைவர் - என்றும் இதில் தெரிவிக்கப்பட்டது. (8-352-202)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# காசநோய் கண்காட்சியும் பொதுமருத்துவ சேவையும்

செம்பியன்பற்று வடக்கு றோ.க.த.க.பாடசாலையில் தமிழீழ சுகாதார சேவையினரால் கடந்த 17ஆம் திகதி காசநோய் சிறப்புக் கண்காட்சி, பொதுமருத்துவ சேவை, சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டதுடன் சுகாதார வீடியோப் படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ சுகாதார மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் மருத்துவர் தேவா ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவைகள் மருத்துவர் இசைநிலா ஏற்றிவைத்தார். ஈகைச் சுடரினை மாவீரர் மேஜர் அமுதப்பிரியாவின் தந்தை அமிர்தநாயகம் ஏற்றிவைத்தார். அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் தமிழ்வாணன் மலர்மாலை அணிவித்தார்.

பின்னர் நடமாடும் மருத்துவ சேவைகள், தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவைகள் பிரிவும் இணைந்து சிறப்பு மருத்துவ சேவையை வழங்கினார்கள். தமிழீழ சுகாதார சேவைகள் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினரால் காசநோய் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களுக்கு சளிப்பரிசோதனைகளை மேற்கொண்டனர். (8)



புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான விசேட செயலமர்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.முகுந்தன் பொதுச்சுடர் ஏற்றுவதை முதலாவது படத்திலும் - முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன் தமிழீழ தேசியக் கொடி ஏற்றுவதை இரண்டாவது படத்திலும் - செயலமர்வில் கலந்துகொண்ட மாணவர்களை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: புதுக்குடியிருப்புச் செய்திளாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய அசாதாரண நிலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குக!

## ஜனாதிபதிக்கு ம.ம. முன்னணி தலைவர் கடிதம்

கொழும்பு,ஏப்.20

''நாட்டில் தற்போது தோன்றியுள்ள அசாதாரண நிலையை கட்டுப்படுத்தி அமைதிப் பேச்சுக்கான முயற்சிகள் முன்னெடுக்கவும், நிரந்தர சமாதானத்துக்கான வழிமுறைகள் மேற்கொள்ளவும் உரிய நடவடிக்கையை தாங்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.''

- இவ்வாறு மலைய மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அவர் அனுப்பிய கடிதம் ஒன்றிலேயே மேற்கண்டவாறு அவர் வலியுறுத்தியுள்ளார். அக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

நாட்டில் தற்போது தோன்றியுள்ள நிலைமை மிகப் பாரதூரமான இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இதனை உடனே கட்டுப்படுத்த வேண்டும்.

அவ்வாறு கட்டுப்படுத்தத் தவறும் பட்சத்தில் நாளுக்கு நாள்நிலை மோசமாகி பெரும் அழிவுகளை எதிர்நோக்கும் சூழலே ஏற்படும்.

ஆகவே சமாதான முயற்சிகளில் இனவாதிகளின் தடைகளை அலட்சியம் செய்துவிட்டு இன்று நாட்டில் எரிந்துகொண்டிருக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)





- கனம் 2.5 மி.மீ
- வேறு கூரைத்தகடுகளைவிட மலிவானது
- வெப்பம் குறைந்தது
- மழை நேரங்களில் இரைச்சலற்றது
- சுகாதார இடையூறு அற்றது
- துரு பிடிக்காதது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது
- குடியிருப்பு, விவசாய, வர்த்தக, கட்டிடங்களுக்கு உகந்தது

நீடித்த பாவனைக்கு
பொருத்தும் வழிகாட்டியின்படி
பொருத்துங்கள்
இதனை விற்பனையாளரிடம்
பெற்றுக் கொள்ள மறவாதீர்கள்

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்

சென்ட் அந்தனீஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ. பே: 2324361-5, 2327383-5 பெக்ஸ்: 2446534

விநியோகஸ்தர்
நாராயணா கட்டிடப் பொருள் வர்த்தகர், 95/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## நீங்காத நினைவுகளில்....

**முதலாம் ஆண்டு**



தோற்றம் 18 - 11 - 1920 மறைவு 30 - 04 - 2005

அமரர் பொன்னையா துரைரட்ணம்
திதி: 20.04.2006

**22 ஆம் ஆண்டு**



தோற்றம் 11 - 01 - 1925 மறைவு 10 - 05 - 1984

திருமதி சௌர்ணகாந்திமலர் துரைரட்ணம்
திதி: 07.05.2006

குடும்பத்தின் ஒளிவிளக்காய் எமக்கு நல்வழி காட்டியாய்
நல்வாழ்வு வாழ வைத்த எமது அன்புத் தெய்வங்களே
எத்தனை பிறவிகள் எடுத்தாலும் நீங்களே
எம்முடன் இருந்து எம் நல்வாழ்விற்கு
வழி காட்ட வேண்டும் என கண்ணீருடன்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவில்:
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (49596)(33-18-12-34)

## கேள்வி அறிவித்தல்

### நிர்மாண வேலை

01. தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் சார்பாக தலைவர், மாவட்ட கேள்விச்சபை அவர்களால் தகுதிவாய்ந்த சகல ஒப்பந்தகாரரிடமிருந்து மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | ஒப்பந்த குறியீட்டு இல. | ஒப்பந்த விவரம் | இக்ராட் இல. | கேள்வி பிணை | மீளளிக் கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | JF/MC/DS/01 | பிரதேச செயலகம் நிர் மாணித்தல், நல்லூர் கட்டம் - 1 | M6 | 138,300.00 | 1,000.00 |

02. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல ஒப்பந்தகாரர்களும் கொண்டிருக்கவேண்டும்.
   (1) மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட (ICTAD) தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
   (2) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்க (NCCASL) உறுப்பினராகவும் M6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   (3) ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   (4) முன்னைய வேலைகளில் மோசமான நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.
   (5) ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்க வேண்டும்.
   (6) கேள்விதாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப்படாமைக்கான கடிதத்தையோ ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா), யாழ்ப்பாணம் (தொ.இல. 021 222 2634) பரிசீலிக்க முடியும்.

04. கேள்வி ஆவணங்களை 20.04.2006 தொடக்கம் 10.05.2006 பி.ப. 3.00 மணிவரையும் மீளளிக்கப்படாத கேள்வித் தொகை ரூபா 1,000.00 பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.


05. மூடிய கேள்விகளை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, கச்சேரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 15.05.2006 பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக அனுப்பிவைப்பதுடன், உடனடியாக கேள்வி திறக்கப்படும். இந்நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.

06. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

*பிரதம பொறியியலாளர் அலுவலகம்,*
*கட்டடங்கள் திணைக்களம் (மா),*
*கடற்கரை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி/49002)(33-12-34)

சே..கணேஷ்
தலைவர்,
மாவட்ட கேள்விச் சபை/அரச அதிபர்,
யாழ்ப்பாணம்.

## 4ஆம் ஆண்டு நினைவுகள்



தோற்றம் 28 - 07 - 1958 மறைவு 04 - 05 - 2002

வேலணையைப் பிறப்பிடமாகவும்
கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் தம்பிஜயா குமாரசாமி

இருவிழியாய் எம்மைச் சுமந்தீர்
ஏமாற்றம் தந்தீர்
ஆலமரமாக நின்று
ஆறுதற்கு நிழல் தந்தீர்
விழுதாய் நாங்கள்
வேரூன்றி எழுமுன்னே
விட்டகன்றீர்
ஆழப்பதிந்த நம் நினைவுகள்
நெஞ்சகலா நீண்டு நிற்க
ஆண்டு நாலில்
அதே ஈர நெஞ்சுடன்
உமை நினைந்து
நாம் அஞ்சலி செய்கிறோம்

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (49568)(33-12-34)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சதுரங்கஆட்ட நிபுணர்கள் கிளிநொச்சியில் பயிற்சி வழங்கினர்

கிளிநொச்சி, ஏப்.20

சர்வதேச சதுரங்க ஆட்ட நிபுணர்களால் கிளிநொச்சியில் சதுரங்க ஆட்டமொன்றும் அறிவூட்டல் கருத்தரங்கும் நடத்தப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இந்நிகழ்வு நடத்தப்பட்டது.

இளையோர் செயற்பாட்டு நிறுவன சதுரங்க ஏற்பாட்டாளர் எஸ்.ராகவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரை சுவிஸில் இருந்துவருகை தந்த சதுரங்க ஆட்டக்காரர்களான க.சிங்கம், ச.சிவாஜி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து அறிவூட்டல் கருத்தரங்கு இடம்பெற்றது.

இறுதியில் 16, 17ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட சதுரங்கப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்தப் போட்டிகள் 15 வயதுப்பிரிவு, 21 வயதுப் பிரிவு, ஆசிரியர்கள், திறந்த பிரிவு என நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

* 15 வயதுப்பிரிவு- ஆண்கள்- ஜே.சுஜித், பெண்கள் - நி.லோஜினி
* 21 வயதுப்பிரிவு - ஆண்கள் - மு.தனதீபன், பெண்கள் - எம். தர்சிகா
* ஆசிரியர்கள் பிரிவு - ஆண்கள் - எஸ்.இளையதம்பி, பெண்கள் - ஆர். வாணி
* திறந்த பிரிவு - ஆண்கள் - வை.ரஜனிக்காந், பெண்கள் - ஜே.தர்மினி (3-203)

## உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

ஒட்டுசுட்டான், ஏப்.20

முல்லைத்தீவு மாவட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்த உடற்பயிற்சிப் போட்டிகள் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

முடிவுகள் வருமாறு:

ஆண்கள் - மல்லாவி மத்திய கல்லூரி, கொக்குளாய் அ.த.க.பாடசாலை, றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

பெண்கள் - கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, ஒட்டுசுட்டான் ம.வி., கற்சிலைமடு அ.த.க.பாடசாலை (3-341-203)

## பூநகரிப் பிரதேச பெருவிளையாட்டு

பரந்தன், ஏப்.20

பூநகரிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 5 நாள்கள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள அனைத்து கழகத்தினரும் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளுமாறு பூநகரிப் பிரதேச பதில் விளையாட்டுத் துறை உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (3-352-203)

## உதைபந்தாட்டம்

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் அங்கத்துவ கழகங்களுக்கு இடையிலான 11பேர் பங்கு பற்றும் - விலகல் முறையிலான - உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை வெள்ளிக்கிழமை யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

* பிற்பகல் - 3.30 மணி - அரியாலை ஐக்கிய வி.க . எதிர் பாரதி வி.க.
* பிற்பகல் 5மணி - சென் மைக்கல் வி.க. எதிர் வளர்மதி வி.க. (3-190) (27)



பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இரணைமாதா நகர் றோ.க.த. பாடசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டி நிகழ்வின்போது நடைபெற்ற பாடசாலை மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வைப் படத்தில் காணலாம். (படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி ம.வி. மாவட்டச் சம்பியனாகத் தெரிவானது

வட்டக்கச்சி, ஏப்.20

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கிளிநொச்சி ம.வி. அணி மாவட்டச் சம்பியனானது

19 வயதுக்குட்பட்டவர்களுக்கு நடத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி ம.வி.அணி, தருமபுரம் ம.வி.அணி ஆகியன மோதின

முதலில் துடுப்பெடுத்தாடிய தர்மபுரம் ம.வி அணி 14 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது.

நித்திஸ் 28 ஓட்டங்களைக் கூடுதலாகத் தனது அணிக்குப் பெற்றுக்கொடுத்தார்.

ஜெயசீலன் ஐந்து விக்கெட்டுகளையும் அனுஷன் மூன்று விக்கெட்டுகளையும், கிருஷ்ணவேள், சஞ்சீவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

75 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய கிளிநொச்சி, ம.வி.அணி 11 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 75 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றுச் சம்பியனானது.

அனுஷன் 21 ஓட்டங்களையும் கிருஷ்ணவேள் 19 ஓட்டங்களையும் தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

பிரபு 2 விக்கெட்டுக்களையும் நித்தீஸ், செல்வரஜீபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா வீரர்களை அறிமுகம் செய்து போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

இவ்விரு அணிகளும் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.(3-405-203)






பல்கலைக்கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட முத்தரப்பு கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சம்பியனான யாழ். பல்கலைக்கழக அணியினர் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்களுடன் காணப்படுகின்றனர். (3)

# மாவட்டபூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உடுவில் மான்ஸ் இரு பிரிவிலும் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.20

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே 19 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கும் இடையே நடத்தப்பட்ட பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இரு பிரிவுகளிலும் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய அணி வெற்றிபெற்றது.

**ஆண்கள்** - உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி.

**பெண்கள்** - உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம், உடுவில் மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

(3-190) (24)

# மாட்டுவண்டில் சவாரிப்போட்டி முடிவுகள்

பரந்தன்,ஏப்.20

பன்னங்கண்டி விவசாயிகளும் சுடர் ஒளி விளையாட்டுக் கழகத்தினரும் இணைந்து வட்டக்கச்சி கலைவாணி சவாரித்திடலில் நடத்திய மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகள் 'அ','ஆ','இ','ஈ' என நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்டன.

'அ' பிரிவில் வெற்றிபெற்றோர்:-

நீ.அஞ்சலோ சாந்தன் (இளவாலை), கோ.உமாகரன் (வட்டக்கச்சி), மு.செந்தில்குமார் (பிரமந்தனாறு), ஆ.வசந்தன் (வட்டக்கச்சி).

'ஆ' பிரிவில் வெற்றி பெற்றோர்:-

குகன் (கோரமோட்டை), நா.நகுலேந்திரன் (மூன்றாம் வாய்க்கால்), சி.மகேந்திரம் (விசுவமடு), ச.பிரியசாலினி (பிரமந்தனாறு).

'இ' பிரிவில் வெற்றிபெற்றோர்:-

நீ.அஞ்சலோ சாந்தன் (இளவாலை), மு.செந்தில்குமார் (பிரமந்தனாறு), அ. அஜந்தன் (வட்டக்கச்சி), கு.ரசிகரன் (வட்டக்கச்சி).

'ஈ' பிரிவில் வெற்றிபெற்றோர்:-

தி.சிவராசா (பெரியகுளம்), அ.அருட்செல்வம் (வட்டக்கச்சி), க.சந்திரகாந்தன் (பிரமந்தனாறு), நீ.அஞ்சலோசாந்தன் (இளவாலை).

(3-352-203) (24)

# யாழ். பிரதேச கிரிக்கெட் ஆட்டம் ஜெட்லைனேர்ஸ் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம்,ஏப்.20

யாழ். பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் ஜெட்லைனேர்ஸ் விளையாட்டுக்கழகம் 38 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கடந்த சனிக்கிழமை ஈச்சமோட்டை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜெட்லைனேர்ஸ் விளையாட்டுக்கழக அணி 14 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது.

ரஜீவன் 25 ஓட்டங்களையும் காண்டீபன் 12 ஓட்டங்களையும் குமார் 17 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

தஸ்மன், வின்சனற் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் மினிசியஸ், நிக்கி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

85 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 12.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 49 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ராஜ்குமார், ஜீவராஜ் ஆகியோர் தலா 10 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

நிர்மலன், காண்டீபன், குமார், ரஜீவ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர். இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக மயூரன், தனுஷ்கன் ஆகியோர் கடமையாற்றினர்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக கரபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்ரன் டி.எ.எம்.குணசிங்கம், யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தர் பாலசுப்பிரமணியம் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக ஈச்சமோட்டை கிராம சேவகர் கே. சுந்தரலிங்கமும் கலந்துகொண்டனர். (3-190) (24)

# அரியாலை விளையாட்டு விழா முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.20

அரியாலை 87ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு இடம்பெற்ற போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

*முடிவுகள் வருமாறு:*

*100 மீற்றர்* - 13வயதின் கீழ் - ஆண்கள் த.டிசான், அ.ம. பிராசாத்திராசா, மோ.தவபாலன்.

*100 மீற்றர்* - 13 வயதின் கீழ் - பெண்கள்- க. வாமினா, சி. மதுஷா, சி.துவாராக.

*100 மீற்றர்* - 16வயதின் கீழ் ஆண்கள்- ரி.மதிவதன், கே.நிரோயன், யே.பிரகாஷ்.

*100 மீற்றர்* - 16 வயதின் கீழ் பெண்கள்- வி.கஜித்தா, வி.சாளினி, ஏ.சனுஜா.

*100 மீற்றர்* - 19 வயதில் கீழ் பெண்கள்- ப.மயூரி, செ.சுதர்சனா, ஸ்ரீ.பேபிசாலினி.

*100 மீற்றர்* - 19 வயதின் கீழ் ஆண்கள்- பி.லோகநாதன், பி.டயான், கே.நிசாந்தன்.

*50 மீற்றர்* - 10 வயதின் கீழ் - ஆண்கள்- அ.சஞ்சீவ், அ.கசியந்தன், சி.சரத்குமார்.

*50 மீற்றர்*- 10 [illegible] பெண்கள்- ந.லிசாணி, சு. காய[illegible]

*1500 மீற்றர் ஓட்டம் -ஆண்கள்* - கு.கபிலன், சோ. இரவிச்சந்திரன், உ.தீலிப்குமார்.

*75 மீற்றர் - வேக நடை* - 50 வயதின் மேல் ஆண்கள் - ஜே. ஜீவதாசன், க. சபாரத்தினம், ச. வீரசிங்கம்.

*50 மீற்றர் - வேகநடை* - 40 வயதின் மேல் பெண்கள் - த.இிராணி, சொ. றோகினி, ஜே. யாமினி.

*தலையணைச் சண்டை ஆண்கள்* - ப.கஜன், ந.தனராஜ்.

*தடை ஓட்டம் -ஆண்கள்* - ந. தனராஜ், சு.மகேஸ்வரன், சோ. ரதிசேகரன்.

*சிம்மாசன ஓட்டம்* - ஆண்கள் - அ.வசீகரன், பா.டயான, பா. லோகான்.

*உப்பு ஓட்டம்* - ஆண்கள்- ரா.வதுசலன், ஜே. கோவிநாத், எம். தீபபாலன்.

*எலி ஓட்டம்* - 19 வயதின் கீழ் ஆண்கள்- சு.சுபாஸ்கரன், செ. கிரிசாந்தன், கி. சியாந்தன்.

*வழுக்குமரம் ஏறுதல்* - ஆண்கள் - [illegible]

*4 X 200 மீற்றர் அஞ்சல் ஓட்டம்* - சரஸ்வதி சனசமூக நிலையம், கலைவாணி சனசமூக நிலையம், திருமகள் சனசமூக நிலையம்.

*4 X 200 மீற்றர் அஞ்சல் ஓட்டம் - கழகங்கள்* - அரியாலை சனசமூக நிலையம், அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையம், அரியாலை சனசமூக நிலையம்.

*இசையும் ஆசையும்* - 13 வயதின் மேல் - பெண்கள் நா.சைலஜா, த. தர்சினி, சி. சிவதர்சினி.

*கயிறு இழுத்தல் போட்டி* - சம்சாரிகள் அணி, வாலிபர்கள் அணி.

*கயிறு இழுத்தல் போட்டி* - செல்விகள், யுவதிகள்.

*கிடுகு பின்னல் போட்டி* - அரியரெத்தினம் சந்தகுமாரி, சொக்கலிங்கம் வந்தகுமாரி, செல்வராசா சரஸ்வதி.

*இசையும் ஆசையும்* - திருமணமான பெண்கள் - நா.கலைமதி, பூ.இந்துமதி, சா.றஞ்சிதா.

*மரதன் ஓட்டம்* - 5 மைல்- உள்ளூர் ஆண்கள் - நா. மகிந்தன், அ. உமாறுபன், அ.தமிழ்ச் செல்வன், கே. பிரகாஸ்ராஜ், இ.ரவிச்சந்திரன். (3-190) (27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 253 தொடர் இலக்கம் உடைய Town Acc (Serena) ரக வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 0777252060. (49595)

## வீடு விற்பனைக்கு

யாழ்.கச்சேரி நல்லூர் வீதியில் 6 அறைகள் கொண்ட சகல நவீன வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 5283, 0779210099 (49614)

## தவறிவிட்டது

ஏழாலை தெற்கைச் சேர்ந்த இராசையா கேசவராசா என்பவரின் தேசிய அடையாள அட்டை (733353090V), இராணுவ அடையாள அட்டை என்பன சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 021 222 7356 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (49606)

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த, தம்பு சிதம்பரப்பிள்ளை என்பவரது தேசிய அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், சாரதி அனுமதிப்பத்திரம் உட்பட பல படிவங்கள் அடங்கிய தோற்பை கடந்த 11.04.2006 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும். (சி-49008)

சிவராசா பிரபானந்த் என்பவருடைய மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம் நீர்வேலி இராசவீதியில் நீர்வேலிக்கும் அச்சுவேலிக்கும் இடையில் 16.04.06 ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அச்சுவேலி பஸ்தரிப்பிடம் முன்பாக உள்ள ராஜ்கோ பான்சி கடையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P 0779037469. (49617)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாள்களில் 2kg இற்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 22.04.06 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை - முதலாம் கட்டை, பருத்தித்துறை, றஞ்சித் - 517, ஸ்ரான்லி வீதி, P.ரவி, சாவகச்சேரி. (49607)

## ஒத்து மாறல்

**கொழும்பில் கல்விகற்பிக்கும் B.Sc. பட்டதாரி ஆசிரியர் யாழ்ப்பாணத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார். தொடர்பு: 0777252098**

(49610) (21.14.45)

## நிவாரண விநியோகம்

தென்மராட்சி கிழக்கு, ஏப்.20

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்களுக்கான ஏப்ரல் மாதத்திற்குரிய நிவாரண உலர்உணவுப் பொருள்கள் அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

நிவாரணப் பொருள்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதேசத்தில் உள்ள வறுமை நிலையில் வாழும் குடும்பங்களுக்கும் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுவதாகவும் - கடந்த மாதம் நிவாரணப் பொருள்கள் பெற்ற கிளைக் கடையில் அவர்கள் நிவாரணம் பெறலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-117)

## கட்டடம் திறப்பு

தென்மராட்சி கிழக்கு, ஏப்.20

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கும் வரணி கரம்பைக்குறிச்சி கூட்டுறவுக் கிளையின் புதிய கட்டடம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.35 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனால் வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கலந்துகொள்வார்.

இக்கட்டடம் அமைப்பதற்கான காணியை வரணி திக்கில் கந்தசாமி தேவஸ்தானம் அன்பளிப்பாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-122)

## அத்தியடி முதியோருக்கு

அத்தியடி ஜே/78 கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் முதியவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கு இன்று புகைப்படம் எடுக்கப்படும் என்று அத்தியடி முதியோர் சங்கம் அறிவித்துள்ளது. இதற்காக இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு டி.எம்.ஐ.கல்வி நிலையத்திற்கு இப்பிரிவில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களை 30 ரூபா பணத்துடன் வருகை தரும்படி முதியோர் சங்கம் கேட்டுள்ளது. (ஓ)

# சைவப்புலவர் சங்க ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.20

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவும், சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும், பொதுக்கூட்டமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தனராக யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் கலந்து கொள்ளவுள்ளார். மங்களவிளக்கேற்றல், பஞ்சபுராணம் ஓதுதல், வரவேற்புரை என்பவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

ஆசியுரையை நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகபரமாச்சாரியசுவாமிகளும், வாழ்த்துரையை கலாநிதி வ.கந்தசாமியும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து பட்டமளிப்புப் பேருரையினை பேராசிரியர் இ.குமாரவடிவேல் நிகழ்த்துவார்.

சிறப்புரைகளை 'மிகுசைவத்துறை விளங்க' எனும் தலைப்பில் மட்டக்களப்பு உதவிக் கல்விப்பணிப்பாளர் சைவப்புலவர் சாமித்தம்பி தில்லைநாதனும், 'சைவப்புலவர்களும் சமூகப்பணியும்' எனும் தலைப்பில் ஊர்காவற்றுறை கலாசார உத்தியோகத்தர் சைவப்புலவர் இ.நித்தியானந்தனும், நிறைவுரையினை சைவப்புலவர் சு.செல்லத்துரை, நன்றியுரையினை சைவப்புலவர் கந்த சத்தியதாசனும் இந்நிகழ்வில் நிகழ்த்தவுள்ளனர்.

சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பட்டம் பெறுவோருக்கு பட்டமளிப்பும் புராணபடனப் போட்டியில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.

(ஓ-13)

## திருக்குறள் திருவிழா அழைப்பு



நல்லூர்க் கோட்ட கல்விப்பணிப்பாளர் **கே.வி.குணசேகரம்** எழுதி வரும், 1,330 குறள் கதைகள் உலக அறிஞர்களால் போற்றப்பட்டு, பாராட்டுப் பெற்றவை அது மட்டுமல்ல தமிழக அறிஞர்களால் ''மயிலிறகணி மாமகுடம்'' சூட்டப்பட்ட பெருமைக்குரியவராவார் கே.வி.குணசேகரம் இதுவரை ஒருவராலும் படைக்காத வரலாறு படைத்த பணிப்பாளர் அவர்களின் கௌரவிப்பு நிகழ்வில் நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள், அன்பர்கள், உறவினர் கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழிடம் : **யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கு**

நிகழும் நாள் : 22.04.2006 சனிக்கிழமை பி.ப. 2 மணி

இந்த அறிவிப்பை யாவரும் தனிப்பட்ட அறிவிப்பாகக் கொள்ளவும்.

(49587) (32.21.45.)

**நயினை.எஸ்.சோமேஸ்வரபிள்ளை**
*(தலைவர், நல்லூர்க் கோட்ட அதிபர் சங்கம்).*

## கண்ணீர் அஞ்சலி

*யாழ்.போதனா வைத்தியசாலையில்*
*தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும்*

**திருமதி பாமினி சகீலன்** *அவர்களின் கணவர்*

**இராமலிங்கம் சகீலன்**

**அகால மரணமடைந்ததையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.**

(49612) (21.14.45)

**யாழ்.போதனா வைத்தியசாலை**
**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்**

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை சிவநேசன்



*(ஓய்வுபெற்ற லிகிதர்)*

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில், நெட்டிலிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட ஐயாத்துரை சிவநேசன் அவர்கள் 17.04.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் பாஸ்கரன் (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்), கோபிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிரூபி (சுவிஸ்), லோகிதகலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ரதிவர்ணனின் அன்புப் பேரனும் சுந்தரலிங்கம், விஜயலட்சுமி, தில்லைநாதன், யோகேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும் நளாயினி, கதிர்காமராசா, மகாராணி, ரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2006) வியாழக்கிழமை நண்பகல்12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெட்டிலிப்பாய், கோண்டாவில். (49611)(21.14.45) தகவல்: [illegible]

# சாயி சிந்தனை



## தூய பார்வை

தூய்மையான பார்வை தேவை. சாத்வீக உணர்வுகளும் எண்ணங்களும் தோன்ற உங்கள் பார்வையும் நோக்கமும் நல்லதாயிருத்தல் வேண்டும். படைக்கப்பட்டவை யாவும் (சிருஷ்டி) பார்வையைச் சார்ந்தே இருக்கும் (திருஷ்டி).தீய நோக்குடன் பார்த்தால் தான் தீய எண்ணங்கள் தோன்றும். உங்களைவிட வயதில் பெரியவர்களான மாதர்களைக் கண்டால் தாயாகக் கருத வேண்டும். வயதில் சிறியவர்களான பெண்களை (சகோதரிகளாக) தங்கைகளாகக் கருத வேண்டும். இப்படிப்பட்ட எண்ணம் இருந்தால் உங்கள் உணர்வுகளும் தூய்மையாகவே இருக்கும். மாணவர்களுக்குக் குறிப்பாக இதைச் சொல்லவேண்டியுள்ளது. உங்கள் தாயையோ, சகோதரிகளையோ மற்றவர் ஒருவர் தீய நோக்கோடு பார்த்தால் உங்களுக்கு மனக்கொதிப்பு ஏற்படுமல்லவா? இதை மனதிற் கொண்டு நீங்களும் பிறமாதர்களிடம் தூய்மையான உணர்வுகொள்ள வேண்டும். பிறர் செய்வதைக் கண்டனம் செய்யும் நீங்கள் அதே தவறைச் செய்யக் கூடாது.

ஆதாரம்:
**சத்தியசாயி பாபாவின் அருள் நூலிலிருந்து**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

*மலர்வு 13 - 12 - 1936*



*உதிர்வு 23 - 04 - 2003*

### அமரர் கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

**திதி : ஸப்தமி**

*முடிந்து போன மூன்றாண்டுகள்*
*சொல்லும் செய்தி உங்களுக்குத் தெரியுமா?*
*முக்கோடி யுகமானாலும் உங்கள் நினைவு*
*முடியாமல் நெஞ்சோடு தொடரும்!*

126/12, அரசடி வீதி, கந்தர்மடம். (49592)(21.14.45)

**மனைவி, பிள்ளைகள், மருமகன்.**

## மரண அறிவித்தல்



### கந்தையா நாகலிங்கம்

புளியம்பொக்கணை, கலவெட்டித்திடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் கிளிநொச்சி, இரத்தினபுரத்தில் வசித்து வந்தவருமான கந்தையா நாகலிங்கம் அவர்கள் 16.04.2006 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சிதம்பரம் ஆகியோரின் அன்பு மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் நாகேஸ்வரன் (தருமு- கண்டாவளை), சந்திரகுமார் (பரந்தன் தபாலக ஊழியர் - முரசுமோட்டை) ரவீந்திரகுமார் (பிரான்ஸ்), நந்தினிதேவி (புளியம்பொக்கணை), நந்தகுமார் (லண்டன்), உதயகுமார் (கனடா), லிங்ககுமார் (லண்டன்), சூரியகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசத்தந்தையும் பெரியமயில்வாகனம் (கலவெட்டித்திடல்), திருமதி சின்னத்தங்கம் (கலவெட்டித்திடல்), வைரமுத்து (இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் -புளியம்பொக்கணை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி நாகம்மா, திருமதி மகேஸ்வரி, திருமதி பகவதி, கதிர்காமநாதன், தனலட்சுமி, தர்மலிங்கம் (காந்தி) ஆகியோரின் மைத்துனரும் கமலாதேவி (கண்டாவளை), தயாநிதி (முரசுமோட்டை), சுபாஜினி (பிரான்ஸ்), நந்தகுமார் (நாகேந்திரா வித்தியாலய அதிபர்), சுதர்சினி (லண்டன்), துஸ்யந்தி (கனடா), மாலதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற சுப்பையா-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் வினித்தா, வினோத், விசிந்தன், விஜிதா, விஜிகலா, நிசாந், நிலானி, நிதுசா, சங்கீர்த்தன், சாருசன், சதுர்சன், சங்கவி, சௌகார்த்திகா, சௌமித்திரா, கிதுசன், கேதுசா, கேசனா, லக்ஸ்சனா ஆகியோரின் பேரனும் சாரங்கனின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புளியம்பொக்கணை நாகபூசனி இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கலவெட்டித்திடல் நெடுமோட்டை இந்துமயானத்தில் இன்று (20.04.2006) வியாழக்கிழமை நண்பகலுக்குப் பின்னர் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புளியம்பொக்கணை, முரசுமோட்டை.** (சி.48996) (39-14-45)

*தகவல்:*
*நா.சந்திரகுமார் (சந்திரன் -மகன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கத்ரீனா'வில் கலங்காது செய்திதந்த பத்திரிகைகளுக்கு 'புலிட்சர் விருது'

அமெரிக்காவில் 'கத்ரீனா' சூறாவளியில் சிக்கி பெருமளவு சேதமடைந்த நிலையிலும் புயல் பாதிப்பு குறித்த செய்திகளை மக்களுக்கு வழங்கிய இரண்டு பத்திரிகைகளுக்கு இந்த ஆண்டுக்கான 'புலிட்சர் விருது' வழங்கப்படுகிறது.

அமெரிக்காவின் நியூஆர்லியன்ஸ் மாகாணத்தில் கடந்த ஒகஸ்ட் மாதம் 'கத்ரீனா' புயல் தாக்கியது. மாகாணமே சின்னாபின்னமான நிலையில் நியூஆர்லியன்ஸ் நகரில் இயங்கி வந்த 'டைம்ஸ்-பிகாயுன்' என்ற பத்திரிகை அலுவலகத்திற்கு உள்ளேயும் மழை வெள்ளம் புகுந்தது. செய்தியாளர்கள் மற்றும் ஊழியர்கள் குடும்பத்தினர் வீடிழந்து தவித்தனர். எனினும், அங்கிருந்து 80 கி.மீ. தொலைவிற்கு அலுவலகத்தை இடமாற்றம் செய்த பத்திரிகை நிர்வாகம் சூறாவளி குறித்து புகைப்படங்களுடன் கூடிய விரிவான செய்திகளை வெளியிட்டது. இதே போன்று மிசிசிபி மாகாணம் பைலோக்சி நகரில் இருந்து வெளிவரும் 'சன் ஹெரால்டு' என்ற பத்திரிகையும் புயல் மழைக்கு நடுவே சிறந்த பணியாற்றியது.

அமெரிக்காவில் பத்திரிகை, நாடகம், இசை போன்ற துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஆண்டு தோறும் 'புலிட்சர் விருது' வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், 90ஆவது வருடாந்திர 'புலிட்சர் விருது' பெறுபவர் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதில் கத்ரீனா சூறாவளிக்கு நடுவில் சிறந்த பத்திரிகை பணியாற்றிய இரண்டு பத்திரிகைகளுக்கும் பத்திரிகை துறையின் உயரிய விருதான 'புலிட்சர் விருது' வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'பரபரப்பு செய்திகள் (பரேக்கிங் நியுஸ்)' அளித்ததற்காக 'டைம்ஸ்-பிகாயுன்' பத்திரிகைக்கும், சிறந்த 'பொதுச் சேவை' செய்ததற்காக 'சன் ஹெரால்டு' பத்திரிகைக்கும் இந்த விருது பகிர்ந்து அளிக்கப்படுகிறது. (ஒ)

## உலக அரங்கில்

## பிரி.மகாராணிக்கு நாளை வயது 80



பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் தனது எண்பதாவது பிறந்தநாளை நாளை கொண்டாடுகிறார். மகாராணியின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின.

நாளை பிறந்தநாளைக் கொண்டாடும் பிரிட்டிஷ் குடிமக்களில் 99 பேர் மகாராணியுடன் அமர்ந்து அவரது அரண்மனையில் மதிய உணவருந்தும் நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது. (ஒ)

## கனடாவில் கொள்ளை நோய்

ஒட்டாவா,ஏப்.20

பசுவைத்தாக்கும் கொள்ளை நோய் கனடாவில் பரவி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் மேற்குப் பகுதியில் 6 வயது பசுமாட்டை கொள்ளை நோய் தாக்கியது.

இதை கனடா நாட்டு உணவுத்துறை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

இதற்காக மாட்டு இறைச்சியைச் யாரும் சாப்பிடாமல் இருக்க வேண்டாம். பயமின்றி இறைச்சியை சாப்பிடுங்கள் என மக்களை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கடந்த 2003 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 5 முறை இம்மாதிரியான கொள்ளை நோய் கனடாவைத் தாக்கியுள்ளது.

## மசகெண்ணெய் விலை உயர்வு

நியூயோர்க்,ஏப்.20

மசகெண்ணை விலை முன் எப்போதும் இல்லாத வகையில் பீப்பாய் ஒன்றுக்கு 71 அமெரிக்க டொலராக (சுமார் 7ஆயிரத்து நூறு ரூபா ) உயர்ந்துள்ளது.

இதற்கு முன்னர் அமெரிக்காவில் கத்ரீனா சூறாவளியால் எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டபோது மசகு எண்ணெய் விலை அதிகளவாக பீப்பாய் ஒன்றுக்கு 70.85 டொலராக உயர்ந்தது.

நியூயோர்க் முன்பேர வர்த்தக சந்தையில் மே மாதம் விநியோகிக்கப்பட உள்ள மசகெண்ணை விலை பீப்பாய் ஒன்றுக்கு 1.08 டொலர் அதிகரித்து 71.48 டொலராக உயர்ந்தது. இதேபோல் லண்டன் சந்தையில் பீப் பாய் ஒன்றுக்கு 89 சென்டுகள் அதிகரித்து 71.46 டொலர்களாக உயர்ந்தது.

ஈரான் மற்றும் மத்திய கிழக்கில் நிலவிவரும்அரசியல் பதற்றம் உலகம் முழுவதும் மசகு எண்ணெய்க்கான தேவை அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக விலை உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்க ப்பட்டது.

# இந்தியப் பிரதமரின் தூதுவராக நேபாளம் விரைகிறார் கரண்சிங்



புதுடில்லி,ஏப்.20

நேபாளத்தின் அரசியல் குழப்பத்தைச் சீர் செய்வதற்காக இராஜதந்திரியொருவரை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அனுப்பிவைத்தார். முன்னாள் இந்திய அமைச்சரும், நாடாளு மன்ற உறுப்பினருமான கரண்சிங் என்பவரையே இந்தியப் பிரதமர் தனது பிரதிநிதியாக நேபாளத்துக்கு அனுப்பியுள்ளார்.

அமெரிக்காவுக்கான இந்தியத் தூதராகப் பணியாற்றியவரான கரண்சிங் திருமண உறவுமுறையால் நேபாள மன்னர் ஜியானேந்திராவுக்கு உறவினராவார்.

இந்தியப் பிரதமரின் செய்தியை நேபாள மன்னருக்கு எடுத்துச்செல்லும் தான் அந்நாட்டின் தற்போதைய நிலைமையை மதிப்பிடுவார் என்று கரண்சிங் கூறினார்.

நேபாளத்தின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடும் எண்ணம் இந்தியாவுக்குக் கிடையாதென்றும் -

ஆனால், நீண்ட காலமாக நட்புறவு கொண்டுள்ள நேபாளத்துக்கு பிரச்சினையைத் தீர்க்க இந்தியா உதவவிரும்புவதாகவும் - கரண்சிங் மேலும் கூறினார்.

இதற்கிடையில்-

நேபாளத்தில் இரண்டு முன்னாள் பிரதமர்களுடன் மன்னர் ஜியானேந்திரா நடத்திய பேச்சு தோல்வியில் முடிந்தது. ஜனநாயகத்தை மீட்க நடவடிக்கை எடுத்தால்தான் போராட்டத்தைக் கைவிடுவோம் என அவர்கள் கூறியுள்ளனர். அதுவரை மன்னருடன் எந்த உடன்பாடும் செய்துகொள்ளமாட்டோம் எனவும் உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

நேபாளத்தில் மன்னர் ஜியானேந்திராவுக்கு எதிராக அரசியல் கட்சிகள் நடத்தி வரும் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. போராட்டத்தின் எதிரொலியான உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் பொருளாதார சிக்கலை ஏற்படுத்தும் நோக்கில் அரசுக்கு வரிசெலுத்தக் கூடாது என மக்களை அரசியல் கட்சிகள் கேட்டுக்கொண்டுள்ளன. (ஒ)



நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் பொலீஸார் தடியடி நடத்தி ஆர்ப்பாட்டக் காரர்களை விரட்டுவதையும், அங்கு இடம்பெறும் வன்முறைகளின் போது காயமடைந்தவர்களுக்கென வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர் இரத்ததானம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கைதிகளின் உள் உறுப்புகள் விற்பனை; சீன அரசின் மீது குற்றச்சாட்டு

லண்டன்,ஏப்.20

சிறைக்கைதிகளின் உள் உறுப்புகளை சீனா விற்பனை செய்வதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பிரிட்டிஷ் உறுப்பு மாற்றுச் சிகிச்சை சங்கம் நேற்று வெளியிட்ட அறிகையிலேயே இக்குற்றச்சாட்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உடல் உறுப்புகள் விற்பனை செய்வதை எதிர்வரும் ஜுலை மாதம் முதல் தடை செய்யப்போவதாக சீன அரசு கடந்த மாதம் அறிவித்திருந்தது. இந்நிலையிலேயே சிறைக் கைதிகளின் உடல் உறுப்புகளை அகற்றி சீன அரசு விற்பனை செய்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சீனாவில் சிறைக்கைதிகளின் சம்மதம் பெறாமலேயே அவர்களது சிறுநீரகம் போன்ற உறுப்புகள் அகற்றப்பட்டு, அவை தேவைப்படும் நோயாளர்களுக்கு விற்கப்படுவதாகவும் -

இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத மிக மோசமான மனித உரிமை மீறலாகும் என்றும் - பிரிட்டிஷ் உறுப்பு மாற்று சிகிச்சை சங்கத் தலைவர் பேராசிரியர் ஸ்டீபன் விக்மோர் தெரிவித்தார். மேற்கத்தைய நாடுகளைச் சேர்ந்த நோயாளர்களில் பலரும் உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்காக சீனாவுக்கு செல்கின்றனர். அங்கு அவர்களுக்குப் பொருந்தக்கூடிய உறுப்புகளுக்குப் பற்றாக்குறை நிலவும்போது, சிறைக்கைதிகளின் உறுப்புகள் சட்டவிரோதமாகப் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பேராசிரியர் மேலும் கூறியுள்ளார்.

மிக அரிதான சந்தர்ப்பங்களில் சிறைக் கைதிகளின் சம்மதத்துடன் உறுப்புகள் பெறப்பட்டு உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்று சீன சுகாதார அமைச்சின் அதிகாரிகள் கடந்த வாரம் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# இஸ்ரேலில் தற்கொலைத் தாக்குதல்!

டெல்அவிவ்,ஏப்.20

இஸ்ரேல் டெல்அவிவ் உணவுவிடுதி ஒன்றில் பலஸ்தீனத் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 9 பேர் மரணமானதுடன் 50 பேருக்கு மேல் காயமடைந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் தாங்களே சம்பந்தப்பட்டிருக்கிறோம் என இஸ்லாமிய ஜிகாத் குழு ஒன்று அறிவித்துள்ளது.

இந்தக் குண்டுத் தாக்குதலையடுத்து இஸ்ரேலிய விமானம் காஸா நகரிலுள்ள உலோகத் தொழிற்சாலை மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. றொக்கெட் தயாரிப்புக்காக இந்தத் தொழிற்சாலை பயன்படுத்தப்பட்டு வந்தது என இஸ்ரேலிய இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து அமெரிக்கா விடுத்த ஒரு செய்தியில் பயங்கரவாதச் செயல்களை ஆதரிக்கவேண்டாம் என்று பலஸ்தீன அரசை எச்சரித்துள்ளது. இது ஒரு வெறுப்புக்குரிய பயங்கரவாதச் செயல் என்று அமெரிக்க அரசுத் தரப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த மாதிரியான செயற்பாடுகளைத் தடுத்துநிறுத்தாமலிருப்பதன்மூலம் பலஸ்தீன அதிகாரசபை இதற்குப் பொறுப்பாகின்றது என்று அவர் தெரிவித்தார்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஐநா. செயலாளர் நாயகம் பலஸ்தீன அதிகாரசபைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

டெல் அவிவில் இடம்பெற்றுள்ள காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கைகளுக்குப் பலஸ்தீன ஹமாஸ் உட்படப் பல அமைப்புகள் நியாயம் கற்பித்துள்ளன. இன்னும் சில பாராட்டியிருப்பதையும் அவதானிக்கிறோம் என வெள்ளைமாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸ் தலைமையிலான பலஸ்தீன அரசின் உண்மையான தன்மை வெளிப்பட்டிருக்கின்றது என்று ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் சீன் மார்க்கோமார்க் கூறியுள்ளார்.

# பலஸ்தீனத்துக்கு ஈரான் உதவி: அமெ.எதிர்ப்பு அதிரடி நடவடிக்கை

அமெரிக்காவின் நிதியுதவி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து, பலஸ்தீனத்துக்கு ரூ. 225 கோடி அளவுக்கு ஈரான் நிதியுதவி அளித்துள்ளது. இது அமெரிக்காவுக்கு எதிரான நடவடிக்கை என்று தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீனத்துக்கு ஆதரவு தரும் நாடுகளின் கூட்டம் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் கடந்த திங்கட்கிழமை நடந்தது. அப்போது, ஈரான் நாட்டின் வெளியுறவு அமைச்சர் நிதியுதவிக்கான அறிவிப்பை வெளியிட்டார்.

பலஸ்தீனத்தில் ஹமாஸ் அமைப்பு வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியவுடன், இஸ்ரேலுடன் மோதல் போக்கை கைவிட்டு அந்நாட்டை அங்கீகரிக்குமாறு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்தது. இதற்கு ஹமாஸ் மறுக்கவே, நிதியுதவியை அது நிறுத்தியது.

சர்வதேச நாடுகளின் நிதியுதவி நிறுத்தப்பட்டால் ஈரான் நிதியுதவு அளிக்கும் என அந்நாடு ஏற்கனவே அறிவித்திருந்தது. அதன்படி, நிதியுதவியை அறிவித்துள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுகிறோம்



புங்குடுதீவு மண்ணின் தாயின் பேரனுமாகிய புங்குடுதீவு தென்னிந்தியச் திருச்சபையின் நிர்வாகப் பொறுப்பாளருமாகிய புங்குடுதீவு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க உபதலைவருமாகிய

**திரு A.R.அம்பலவாணர்**

அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவான் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்ததை முன்னிட்டு அவருடைய சமூகத்தொண்டு புங்குடுதீவு மக்களுக்கு தொடர்ந்து கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**M.K.திருலோகநாதன்,**
**சிறீசக்தி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்.**

(49624)



ACTION CONTRE LA FAIM

**FIELD OFFICER**
**For AFCIRD PROJECT**
**(JAFFNA)**

Action contre la Faim is an International NGO involved in humanitarian activities in Sri Lanka, since 1997. Current activities are based in Ampara, Batticaloa, Jaffna and Trincomalee districts. It is a partnership program between ACF and institution of research for development. **We require the services of men as field officer** (FO) for this project.

This position is suitable for a person who has fair knowledge about Jaffna and its ground water hydrology and having technical qualification in diploma level / degree will be an advantage.

The FO will be in charge of the implementation of the program He will manage the collection and analysis of data, the reporting, field tests and the follow up of activities. He should have the capacity to work under less supervision for the objective of the program. He will work under the responsibility of a Program Manager responsible for all bases.

Applicants must be good in working with rural communities, fluent in English and able to do conversation in Tamil. A motorbike driving license and computer literacy, especially MS Word and Excel are required.

**Duration:** 1 year with insurance coverage

Apply within 10 days or as soon as possible:
**ACF Job Vacancy**
**No. 40, Racca Lane,**
**Chundilkuli.**
**Jaffna.**
**T.P :0212222465/6993**



**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

**772** நீலம்

விருச்சிகம்

18-04-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4217879 - 4225204

வெற்றி இலக்கங்கள் **33 49 51 52**

**ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/- வெல்லப்பட்டுள்ளது**

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 46,62,780/-
தொடர் இல. 5124360 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கெட்டுக்கள்
2006 ஏப்ரல் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 1,41,983 | 10/- | 14,19,830/- |
| 2 இலக்கங்கள் | 12,996 | 20/- | 2,59,920/- |
| 1 இல+லக்கினம் | 12,896 | 30/- | 3,86,880/- |
| 2 இல+லக்கினம் | 1,154 | 100/- | 1,15,400/- |
| 3 இலக்கங்கள் | 347 | 500/- | 1,73,500/- |
| 3 இல+லக்கினம் | 31 | 5,000/- | 1,55,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 1,00,000/- | 1,00,000/- |
| 4 இல+லக்கினம் | 1 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | 5 | | 36,10,530/- |
| முச்சக்கர வண்டிகள் | | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 1,69,414 | | 46,62,780/- |

**இந்த வெள்ளிக்கிழமை ரூபா 10,00,000/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 4225071-4-38 |
| மாத்தறை | 4222024-2-41 |
| மாத்தளை | 4218775-1-00 |
| காலி | 4222840-1-03 |
| குருநாகல் | 4222349-9-53 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03


# பெரிய விளானில் பனம் தொழில் பேட்டை!

வலி.தென்மேற்கு,ஏப்.20

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பெரிய விளான் சந்திக்கு அருகில் பனம் தொழில் பேட்டை ஒன்றை விரைவில் திறக்கவுள்ளது. இத் தொழில் பேட்டைக்கான கட்டட வேலைகள் யாவும் பூர்த்தி யடைந்துள்ளதாகவும், விரைவில் திறந்துவைக்கப்படவுள்ள தாகவும் சங்கத்தின் பொதுமுகாமையாளர் கி.குணரத்தினம் தெரிவித்தார்.

இக்கட்டட அமைப்பு வேலைகளுக்கு மாவட்ட நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்க செயலிகம் ஐந்து இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

இதேவேளை - யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கி. சிவநேசன் ஒரு இலட்சம் ரூபாவையும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஐம்பதாயிரம் ரூபாவையும் பன்முகப்முகப்படுத்தப்பட்டவரவு-செலவுத்திட்ட நிதி மூலம் இக்கட்டட வேலை களுக்கு வழங்கியுள்ளனர்.

இத் தொழில் பேட்டையில் பனை வெல்லம், பாணிப் பனாட்டு போன்ற பனம் உணவுப் பண்டங்கள், புளுக்கொடியல் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்படவுள்ளன.

இதேசமயம் பனை ஓலைமூலம் பெட்டி, கடகம், பாய், தொப்பி போன்ற கைப்பணிப் பொருள்களும் இங்கு உற்பத்தி செய்யப்படவுள்ளதாகவும், இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-135)

# சரசாலை நூலகத்தில் கதைநேரம்

தென்மராட்சி,ஏப்.20

சாவகச்சேரிப் பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தில் சிறுவர்களுக்கு கதைவேளை நேரம் என்னும் நிகழ்வு ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு பிரதி சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3 மணிக்கு நூலக மண்டபத்தில் இந்நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வியுடன் தொடர்புடைய கதைகள் இந்நிகழ்வுகளில் கல்வியாளர்களால் சொல்லப்படுமென நூலகர் இ.தர்மலிங்கம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள மாணவர்களும், பயனுள்ள கதைகளை மாணவர்களுக்குப் போதிக்கக்கூடிய கல்வியாளர்களும் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-117)


டாரி எயர் கொம்பிரசர் DARI AIR COMPRESSORS

டிரெக்ட் கப்பல் மற்றும் பெல்ட் டிரீவன்.

உள்ளடக்கம் 24 முதல் 240 லீற்றர்



ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
524. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5. 2337263-5 நேரடி : 2337286
பெக்ஸ்: 2446554

நாராயண கட்டடப் பொருள்கள் வர்த்தகர் 95/1,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



**மருத்துவ சான்றிதழுக்கு விண்ணப்பித்த கனரக வாகன (A வகுப்பு) சாரதி பயிலுநருக்கான அறிவித்தல்**

கொழும்பில் இருந்து படிவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே வழமையான நேரத்தில் "எயிட்ஸ் லைன்" (OPD க்கு முன்பாக) நிலையத்தில் மருத்துவ சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**Dr. ந.அரவிந்தன்**
யாழ்.மாவட்டத்திற்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி



FTMS Global — Established since 1994

**STUDY IN SINGAPORE**

**Degree Progr ammes**
(Com Sce, Com Eng, BIT, BBA, Accounting, Marketing)
**Professional Courses - ACCA, CAT**
(May, June பிரிவுகளுக்கான அனுமதியும், மாணவர் குடிவரவு அனுமதியும் பெற்றுக் கொடுக்கப்படும்.)
**Minimum Qualification - GCE (O/L)**

✱ TMIS இல் தொழில்வாய்ப்புடன் Diploma in Trovell & Tourisam கற்கைநெறிக்கு அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
(06 Months - Studies, 06 Months - Work)
✱ இந்தியாவில் கல்வி கற்க விரும்புவோருக்கும் அனுமதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

CREATE SUCCESS & CONFIDENCE WITH FTMS



தொடர்புகளுக்கு:077 3256575, 077 3164320



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 27 - 09 - 1948
மறைவு 21 - 03 - 2006

**அமரர் நடராசா சிவராசா**
(காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை மின்னியலாளர்)

காங்கேசனில் பிறந்து கைதடியில் கால்பதித்து
பரிவோடு எம்மை வளர்த்து
பாசமாய் அரவணைத்த அப்பாவே!
கண்ட கனவுகள் நனவாகும் முன்பே
கொக்குவிலில் காலனவன் சடுதியாய் அழைத்தானோ?

இன்று (20.04.2006) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப.11மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(49621) 27)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.



# அறிவித்தல்

எமது முகாமையாளர் ஆ.தியாகராசாவின் தாய்க்குத்தாயான மாமியார் திருமதி சுந்தரம் செல்லம்மாவின் மறைவையிட்டும், எமது நிறுவன விற்பனைப் பிரதிநிதியான நடராசா பிரகலாதனின் அன்புத் தாயின் மறைவையிட்டும் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களுக்கு மரியாதை செலுத்துமுகமாக எமது நிறுவனம் இன்று (20.04.2006) வியாழக்கிழமை மூடப்பட்டிருக்கும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

DSI Tyres | Ranpa

முகவர் நிறுவனம்,
13, நவீனசந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.



# அனுதாபச் செய்தி



அன்புள்ள நடராஜா குடும்பத்தினருக்கு...

யாராலும் ஈடு செய்ய முடியாத அருமை மனைவி ஆசை அம்மாவை இழந்து தவிக்கும் உங்கள் அன்பு நெஞ்சங்களுக்கு எமது ஆறுதல் அளிக்கும் வார்த்தைகள் உங்கள் துயரை சற்று நீக்கலாம்.

இருப்பினும் யாதும் கவடுபடாமல் உங்களை மட்டுமன்றி அயலவர்களாகிய எம்மையும் துயரில் ஆழ்த்தியுள்ளமையையிட்டு ஒரு கணம் மனம் பதறினும் மறுகணம் தங்களையும், தங்கள் பிள்ளைகளையும் தம்பணி தொடர இப்பூவுலகிற்கு அவர் விட்டுச் சென்றுள்ளார் என்பதை உணர்ந்து பெருமையும் ஆறுதலும் அடைவீர்களாக!

**முகவர் நிறுவனம்**
13, நவீனசந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.

DSI Tyres | Ranpa

(சு.49012) (89)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியை போவர் சந்திக்க நேரம் ஒதுக்கப்படவில்லையாம்!

கொழும்பு, ஏப்.20

கொழும்பு வந்துள்ள இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட பிரதிநிதி ஜோன் ஹன்ஸன் போவர் தனது இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க மாட்டாரென்று தெரிகிறது.

ஜனாதிபதியை போவர் சந்திப்பதற்கான நேர அனுமதியை நோர்வேயின் கொழும்புத் தூதரகம் கேட்டிருந்தபோதும் ஜனாதிபதி செயலகத்திலிருந்து இதற்குரிய பதில் நேற்றுமாலை வரை சாதகமாகக் கிடைக்கவில்லையென்று நோர்வேத் தூதரக வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, கொழும்பில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரை நேற்று சந்தித்து தனித்தனியே பேச்சு நடத்திய போவர் இன்று கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளார்.

நேற்றைய கொழும்புப் பேச்சுகளின்போது விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பில் பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் போவரிடம் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர் எனத் தெரியவருகிறது.

வன்னியில் ஹன்ஸன் போவரை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சந்திக்காத நிலையில் கொழும்பில் அவரை அரசுத் தலைவர் ஜனாதிபதி சந்திப்பது பொருத்தமற்றது என அரச வட்டாரங்கள் கருதுவதனாலேயே போவரைச் சந்திப்பதற்கு ஜனாதிபதித் தரப்பில் நேரம் ஒதுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க)

# கட்சியின் சகல பொறுப்புகளிலிருந்தும் ஜே.வி.பியின் எம்.பி. ஒருவருக்கு கல்தா!

## ஜனாதிபதிக்கு ஆதரவாக செயற்படுபவராம்

கொழும்பு, ஏப். 20

ஜே.வி.பியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிபால அமரசிங்க, கட்சிக்குள் வகித்து வந்த அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் திடீரென விலக்கப்பட்டிருக்கிறார் என ஜே.வி.பியின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஜே.வி.பியின் தொழிற்சங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்துள்ள அமரசிங்க, கட்சிக்குள் இனவாதத்திற்கெதிராகக் குரல் கொடுத்து வந்தவராவார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒரு சில கொள்கைகளையும் இவர் ஆதரித்து வந்தாரெனக் கூறப்படுகிறது.

கட்சிப் பொறுப்புக்களிலிருந்து இவர் திடீரென நீக்கப்பட்டதற்கான காரணம் என்னவென்பது பற்றி உடனடியாகத் தெரியவரவில்லை. ஆனாலும், அமரசிங்க எம்.பி., ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு முழு ஆதரவைத் தெரிவித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணையும் யோசனை கொண்டிருந்தாரெனத் தெரிகிறது.

ஜே.வி.பியின் முக்கியமான உறுப்பினர்கள் பலரும் இவ்வாறு ஜனாதிபதி மஹிந்தவிற்கு ஆதரவைத் தெரிவித்து, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியில் இணைவதற்கு யோசனை கொண்டிருக்கின்றனர் என ஜே.வி.பியின் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-க)

# முஸ்லிம் இளைஞர் படுகொலையைக் கண்டித்து நாளை கடையடைப்பு நடத்துமாறு கோரிக்கை.

யாழ்ப்பாணம்,ஏப்.20

யாழ். நகரில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து குடா நாட்டில் நாளை வெள்ளிக்கிழமை கடையடைப்பு நடத்துமாறு யாழ். முஹம்மதியா ஜும்ஆ பள்ளிவாசல் கோரியுள்ளது.

இது குறித்து ஜும்ஆ பள்ளிவாசல் (புதுப்பள்ளி) சார்பில் நேற்றிரவு ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக்குறிப்பில்:-

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.முனீஸ்வரன் வீதியில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட மீரா மொகிதீன் ஜுனைத் அஸ்மி என்பவரின் படுகொலையைக் கண்டிக்கும் வகையில் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

எனவே, நாளை வெள்ளிக்கிழமை சகல இன மக்களையும் வர்த்தக நிலையங்களைப் பூட்டியும் கறுப்பு, வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டும் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் உயிரிழந்த முஸ்லிம் இளைஞரின் ஆத்மசாந்திக்காக 'ஜும்ஆ' தொழுகையின் பின்னர் 'துஆ' பிரார்த்தனை நடைபெறும் - என்று அதில் உள்ளது.

(எ)

# புத்தூர் படுகொலையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரப்படுத்தி ஊக்குவித்து - பெருப்பித்து - பாதுகாப்பளித்து - ஆயுதம் வழங்கி அப்பாவி தமிழ்மக்களை படுகொலை செய்தும், சிறுவர்களைக் கடத்தியும் கொடூரம் புரிந்து வருகின்றது.

இவ்வகையில், யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா அரச படைகளின் அராஜகம் தலைவிரித்தாடுகிறது. சாவகச்சேரியில் அதியுயர் கண்காணிப்புப் பகுதியில் தமிழ் இளைஞர்களைக் குறி வைத்து இராணுவத்தினர் நடத்திய குண்டுத்தாக்குதலில் மாணவனும் இளைஞர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினராலும், இராணுவப் புலனாய்வாளர்களாலும் ஈ.பி.டி.பியினராலும் இதுவரை 17பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஈ.பி.டி.பியினர் கேட்ட கப்பத்தை வழங்க மறுத்த வர்த்தகர் சாவகச்சேரியில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இதேபோல, முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்க மறுத்த அந்த நபர் ஈ.பி.டி.பியினருடனும் இராணுவப் புலனாய்வாளர்களுடனும் இணைந்து அப்பாவி முஸ்லிம் வர்த்தகரை ஈனத்தனமான முறையில் படுகொலை செய்துள்ளனர்.

நாளாந்த ஜீவனோபாயத்திற்கான தொழில்களைப் புரிந்துவந்த அப்பாவி இளைஞர்கள் ஐந்து பேர் நேற்றிரவு (செவ்வாயிரவு) புத்தூர் இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினரால் சித்திரவதைசெய்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

சிங்கள இராணுவத்தினரின் இந்த அநாகரிகச் செயல் தமிழ் மக்கள் ஒவ்வொருவரையும் கொதிப்படைய வைத்துள்ளது. சர்வதேச அனுசரணையாளர்களின் ஏற்பாட்டுடன் நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த காலத்திலேயே இக்கோரப்படுகொலையை சிங்களப் படைகள் புரிந்துள்ளன.

இவ்வாறான படுகொலைகள மூலம் மக்களிடம் மரணபீதியை ஏற்படுத்தி அச்சுறுத்தி அடிபணியவைப்பதே இவர்களது நோக்கமாகும். இதே இடத்தில் முன்னர் இராணுவத்தினரால் ஒரு பொதுமகன் அடித்துக் கொல்லப்பட்டிருந்தார். இப்படுகொலைச் சம்பவம் நடைபெற்றபோது அவ்வீதியால் சென்ற கந்தசாமி கௌரிபாலன் என்பவர் இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வெறிபிடித்த இராணுவத்தினரே இந்தப் படுகொலையையும் புரிந்துள்ளார்கள். எமது உறவுகளுக்கு தோண்டிய அதே புதைகுளிக்குள்ளேயே புதைகுளி வெட்டுவோம் என இப்பகுதி மக்கள் குமுறி எழுகின்றனர். இப்படுகொலைகள் பற்றி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டுள்ளோம்.

இது ஒவ்வொரு தமிழரினதும், தேசிய ஆன்மாவை ஒருகணம் உலுப்பி உறையவைத்துள்ளது. இச்சம்பவமானது தமிழர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்கு தயாராகுவதே ஒரே வழி என உணர்த்தி நிற்கின்றது - என்று அதில் உள்ளது.

# கோண்டாவிலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகன் (வயது 38) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வர்த்தகர்மீது துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தி விட்டுத் தப்பிச்சென்றுவிட்டனர் எனக் கூறப்பட்டது.

வர்த்தகரின் சடலம் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-13-15-45-49-78)


## கண்ணீர் அஞ்சலி

கொல்லவிளான்குளம், வவுனிக்குளம், மல்லாவியை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவரும் எமது கல்விநிலையத்தின் பழைய மாணவனும் மு/ மல்லாவி மத்திய கல்லூரியின் 2007 கணிதப் பிரிவு மாணவனுமான

**செல்வன் நவரத்தினம் பிரகாஷ்**

19.04.2006 அன்று அகாலமரணம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். (49627)(18-17-49)

**நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள், நியூ ஐடியல் கல்வி நலையம், பாலிநகர், வவுனிக்குளம்.**

## மரண அறிவித்தல்கள்

### தங்கராஜா கவீந்திரன்

புத்தூரைச் சேர்ந்த தங்கராஜா கவீந்திரன்அவர்கள் 18.04.2006 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தங்கராஜா - இராசமலர் தம்பதியரின் அன்பு மகனும் தயாபதி (கனடா), குணராஜன்(கனடா), அருட்குமரன் (கனடா), கவியரசன் (சிலிங்கோ கூட்டுத்தாபனம்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் கிழக்கு, புத்தூர்.* (சி-49018)(18-17-49)

தகவல்: **தங்கராஜா(தந்தை).**

### திருமதி மாசிலாமணி சுரேசா



வட்டு.கிழக்கு, அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மாசிலாமணி சுரேசா அவர்கள் 18.04.2006அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் மாசிலாமணியின் அன்பு மனைவியும் மனோஜா, சுபாஸ்கர் ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை -பசுபதிநாயகி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகரத்தினம் -இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் சேகரன், பாஸ்கரன், சுமதி, அருள்ராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வமணி(லண்டன்), சிவநேசன்(சுவிஸ்),சுமித்திரா, சாந்தநாயகி, பரிமளகாந்தி, ஞானதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவாம்சன், பானுஜா ஆகியோரின் மாமியும் சயன், பிரவீனா, நிசானி, ஞானதர்சன், சர்மிகாஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.04.2006) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'இரட்ண இல்லம்' வட்டு .கிழக்கு,சித்தன்கேணி.* (49628)(18-17-49)

தகவல்: **க.இராஜேஸ்வரி(மாமி).**

## ஆசிரியர் தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் ஆண்டு 7 ஆங்கில மொழி மூலம் கல்வி கற்கும் மாணவனுக்கு வீட்டிற்கு வந்து கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். (சி-49019) (18-17-49)

**விளம்பர இல. 2857**

**மே/பா உதயன், யாழ்ப்பாணம்.**

## தேவை

**தொலைத்தொடர்பு நிலையத்திற்கு பெண்களும் இரும்பகத்திற்கு ஆண்களும் தேவை.**

**(தங்குமிட வசதி உண்டு)**

தொடர்பு:தேனுயன் றேட்ஸ்,
பிரதான வீதி, அச்சுவேலி.

(சி/49017) 021 226 3418

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

பரத், மல்லிகா கபூர் நடித்த

**அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது**

10.30,2.30,6.30,9.30 ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாகம்ஸ் சுன்னாகம்

ஜீவா, சந்தியா மற்றும் பலர் நடித்த

**டிஸ்யும்**

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த

**கள்வனின் காதலி**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

## மரண அறிவித்தல்கள்

### துரைசிங்கம் விமலேஸ்வரன் (கண்ணன்)

(கண்ணன் கராஜ் உரிமையாளர்)



பூநகரியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் விமலேஸ்வரன் (கண்ணன்) அவர்கள் 17.04.2006 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் துரைசிங்கம் - சரசு தம்பதியரின் அன்பு மகனும் முருகேசு - மாணிக்கம் தம்பதியரின் மருமகனும் கோசலாதேவியின் அன்புக் கணவரும் சோபனா, மதுசன், பிரார்த்தனா, தாட்சாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் விக்னேஸ்வரன்(லண்டன்),விமலசோதி(பிரான்ஸ்), விமலதர்சினி, விமலநாதன், விமலரூபன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் புண்ணியமூர்த்தி, சிவலிங்கம், மகேந்திரன், ஜெயந்தி, துசன், விநோ, சாந்தா, தமயந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.04.2006) வியாழக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*156 ஆம் கட்டை, வைரவர் கோயிலடி, தொண்டமாநகர்,கிளிநொச்சி.* (49625)(18-17-49)

தகவல்: **து.விமலநாதன் (ஐயன் - சகோதரன்).**

### மாதவி சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை



இணுவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை அவர்கள் நேற்று(19.04.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி -நாகமுத்து தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் அம்பிகாதேவி, திருஞானசெல்வம் (காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை), அகிலாண்டேஸ்வரி(கிளிநொச்சி), அமரர் திருச்செந்தூர்நாதன் (சந்திரன்), சிவஞானசோதி (சுவிஸ்), அமிர்தகலைவாணி(கிளிநொச்சி), அரியமலர்(லண்டன்), திரிபுரிநாதன்(கருணா-சுவிஸ்), கதிர்காமலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சதானந்தன்(சபா - விவசாயம்), தவஜோதி, சிவநேசன்(மலரவன் புடைவையகம், கிளிநொச்சி), வளர்மதி(சுவிஸ்), ஜீவானந்தன் (ஆசிரியர், கிளிநொச்சி, கனகபுரம் மகா வித்தியாலயம்), கணநாதன் (லண்டன்), ராதா (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் தர்ஷன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), தனுஷியன் (யாழ். இந்துக் கல்லூரி), தாரணி (இணுவில் மத்திய கல்லூரி), அனோஜா, அனோஜன், மலரவன்(கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரி), கலைவிழி,காவியா, சுவாதி (சுவிஸ்), டயானி, அபிநாத்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான திருமதி செல்லம்மா சங்கரப்பிள்ளை, நாகநாதர் , திருமதி லட்சுமிப் பிள்ளை துரையப்பா, இராசதுரை, நடராஜா ஆகியோரின் இளைய சகோதரரும் கந்தசாமி, ஆனந்தர், சிவராசா, நடராசா (இத்தாலி), நாகேஸ்வரன், சிதம்பரேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2006) வியாழக்கிழமை பிற்பகல்ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல்தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காரைக்கால், இணுவில் கிழக்கு.* (49629)(18-17-49)

தகவல்: **குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுகளில் ஏற்படும் முட்டுக்கட்டை இலங்கையை கலவர பூமியாக்கிவிடும்

## தமிழகத் தினசரி 'தினமணி'யில் ஆசிரிய தலையங்கம்

சென்னை, ஏப். 20

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமரசப் பேச்சுகளில் ஏற்படும் முட்டுக்கட்டை, இலங்கையை கலவர பூமியாக்கி மக்களின் நிம்மதியைக் கெடுத்துவிடும் என்பதை அரசும், விடுதலைப் புலிகளும் மறந்து விடக்கூடாது.

- இவ்வாறு வலியுறுத்தித் தெரிவித்திருக்கிறது தமிழகத்திலிருந்து வெளிவரும் 'தினமணி' நாளேட்டின் ஆசிரிய தலையங்கம். 'அமைதிப் பேச்சில் முட்டுக்கட்டை' என்ற தலைப்பிலான அந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நோர்வே அரசின் முயற்சியில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமிடையே நடந்துவரும் பேச்சுக்கு தற்போது முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இயக்கத் தலைமையுடன் கலந்து பேசுவதற்கு கடல் வழியில் வரும்போது இலங்கையின் கடற்படையினர் கண்காணிப்பதற்கு விடுதலைப் புலிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதைக் காரணம்காட்டி ஜெனீவாவில் வருகிற 24ஆம் திகதி நடைபெறும் இரண்டாவது சுற்று அமைதிப் பேச்சில் பங்கேற்கமாட்டோம் என்று விடுதலைப் புலிகள் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர். அமைதி ஒப்பந்தத்தை முழுமனதுடன் செயல்படுத்தும்படி இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று பேச்சுக்கான நடுவர்களான நோர்வேக் குழுவை விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அமைதிப் பேச்சுகளில் பங்கேற்க மறுப்பதற்கு கடற்படையினரின் கண்காணிப்பு ஒரு காரணமாகக் கூறப்பட்டாலும், விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற கருணா குழுவினருக்கு இலங்கை அரசு மறைமுக ஆதரவு கொடுக்கிறது என்கிற பிரச்சினையும் ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. விடுதலைப் புலிகளின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து கடந்த சில நாட்களாக இலங்கையில் ஆங்காங்கே வன்முறை மீண்டும் தலைதூக்கியுள்ளது. கடந்த ஒருவாரத்தில் மட்டும் கண்ணிவெடித் தாக்குதலுக்கு பல இராணுவ வீரர்கள் உட்பட 63 பேர் இறந்துள்ளனர்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமிடையே கடந்த சில ஆண்டுகளுக்கு முன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதையடுத்து, இலங்கையில் பெருமளவு அமைதிச் சூழ்நிலை ஏற்பட்டது. இதனால், ஓரளவு நிம்மதியடைந்த இலங்கை மக்கள் பேச்சுகள்மூலம் இறுதித் தீர்வு ஏற்படும்வரை இந்த அமைதி தொடர வேண்டுமே என்று ஏங்குகின்றனர். இடையிடையே சமரசப் பேச்சுகளில் தொய்வு ஏற்பட்ட போதெல்லாம் எப்போது மீண்டும் வன்முறை வெடிக்குமோ என்று அச்சத்தில் தவிக்கின்றனர். இலங்கை இனப்பிரச்சினை காரணமாக இதுவரை 64 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளனர். 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகே கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கையின் பொருளாதாரம் சற்று தலை நிமிரத் தொடங்கியுள்ளது. இந்நிலையில் அங்கு வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கியிருப்பது அனைவருக்கும் கவலை அளிக்கக் கூடிய விஷயமாகும்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின்மூலம் ஏற்பட்டுள்ள ஸ்திரத்தன்மையை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை அரசின் சார்பில் அமைதிப் பேச்சுகளில் ஈடுபட்டவருமான ஜி. எல். பீரிஸ் கூறியுள்ள கருத்து கவனத்தில் கொள்ளத்தக்கது. அமைதிப் பேச்சை நடத்துவதற்குக் கிடைத்த வாய்ப்பை நழுவ விடக் கூடாது.

போட்டி அரசியலில் இலங்கை அரசியல் கட்சிகள் இறங்கக் கூடாது. அமைதி முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு எப்போது, எப்படி ஏற்படும் என்று கூறிவிட முடியாது. எனினும், சமரசப் பேச்சுமூலம் மட்டுமே பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண முடியும் என்பது நிச்சயம். சமரசப் பேச்சுகளில் ஏற்படும் முட்டுக்கட்டை மீண்டும் இலங்கையைக் கலவர பூமியாக்கி, மக்களின் நிம்மதிமதியைக் கெடுத்துவிடும் என்பதை இரு தரப்பினரும் மறந்துவிடக் கூடாது. - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆணைக்குழுக்கள் நியமனத்தை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் மனு

அரசமைப்புக்கு முரணான வகையில் பொதுச்சேவைகள் ஆணைக்குழு மற்றும் பொலீஸ் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டனர் எனத் தெரிவித்து அதனை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கின் விசாரணைக்கு ஆஜராகுமாறு ஜனாதிபதியின் செயலாளர், சட்டமா அதிபர் உட்பட 41 பிரதிவாதிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நோட்டீஸ் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களின் நியமனத்தை ஆட்சேபித்து நல்லாசிக்கான பிரஜைகள் அமைப்பின் தலைவர் டாக்டர் ஏ. சி. விஸ்வலிங்கம், 'அவதி லங்கா' அமைப்பின் தலைவர் சுசில் சிறிவர்த்தன ஆகியோர் தாக்கல் செய்திருந்த இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதியரசர்கள் ஜகத் பாலபட்டபெந்தி, எல். கே. விமலசந்திர ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே வழக்கின் பிரதிவாதிகளான ஜனாதிபதியின் செயலாளர், சட்டமா அதிபர் அரசமைப்புக் கவுன்ஸிலின் செயலாளர் உட்பட 41 எதிர் மனுதாரர்களை எதிர்வரும் 28ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

# திருமலையில் இன்று பதவியேற்பு நிகழ்வு

திருகோணமலை மாவட்டத்தில் அண்மைய உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழரசுக் கட்சியின் தலைவர்கள், பிரதித் தலைவர்கள், உறுப்பினர்கள் இன்று பதவியேற்கின்றனர்.

திருமலை மாவட்டத்தின் நகரசபை மற்றும் பிரதேச சபைகளில் தமிழரசுக் கட்சி கடந்த தேர்தலில் பாரிய வெற்றியை தமதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய இந்த நிகழ்வில் தமிழர் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் பலர் பங்கேற்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# வவுனியாவில் சுற்றிவளைப்பு

வவுனியா நகரப் பகுதிகளிலுள்ள வீதிகள், சந்திகள் போன்றவற்றில் படையினர் நிறுத்தப்பட்டு சோதனை நடவடிக்கைகள் முடக்கிவிடப்பட்டுள்ளன என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினரும், பொலீஸாரும் இணைந்து இந்த சுற்றிவளைப்புத் தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, வவுனியா- மன்னார் வீதியில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் பிரமனாலங்குளம் உட்பட மூன்று இடங்களில் நிறுத்தப்பட்டு பயணி கள் அனைவரையும் இறக்கி சோதனை மேற்கொள்ளப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பூந்தோட்டம் வீதியில் திங்கட்கிழமை இரவு பொலீஸார்மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து நேற்றுமுன்தினம் காலை பெரும் எண்ணிக்கையிலான படையினர் பூந்தோட்டம் பகுதியைச்சுற்றிவளைத்து வீடுவீடாகத் தேடுதல் நடத்தினர். பூந்தோட்டம் பகுதியில் இடம்பெற்ற படையினரின் சோதனை நடவடிக்கைகளையடுத்து பூந்தோட்டம் சந்தி கடை வீதியின் கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. வீதியில் மக்கள் நடமாட்டமும் மிகவும் குறைந்து காணப்பட்டது.

# புத்தூர் படுகொலைகளுக்கும் படையினருக்கும் தொடர்பில்லையாம்!

## பி.பி.ஸி. பேட்டியில் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஏப்.20

"புத்தூர் படுகொலைகளுக்கும் பாதுகாப்புப்படையினருக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. இந்தச் சம்பவத்துக்கு இராணுவத்தினரின் மீதே விடுதலைப்புலிகளின் ஆதரவு ஊடகங்கள் சில பழிபோடுகின்றன."

- இவ்வாறு தெரிவித்தார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க.

நேற்றுமுன்தினம் இரவு புத்தூர் பகுதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக பி.பி.சி. தமிழோசைக்கு நேற்றிரவு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இச்சம்பவம் நடைபெற்றது உண்மையில் புத்தூரில். இரவு 10.30 மணியளவில் சிலர் அங்கு துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் விழுந்து கிடப்பதாக இராணுவ முகாமிற்கு ஒரு தகவல் கிடைத்தது. உடனே ஓர் இராணுவ அதிகாரியும் படையினரும் அங்கு சென்று பார்த்தபோதுமூன்று உடல்கள் காணப்பட்டன.

காலையில் கிடைத்த மற்றொரு தகவலை அடுத்து அங்கு இருவேறு உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

படையினர் வெளியே செல்லவில்லை. இதுபோன்ற ஒருசெயலை அவர்கள் செய்யவில்லை. பொலீஸார் இது குறித்து புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவும் இது குறித்து விசாரணை செய்துவருகின்றது.

அவர்களது விசாரணைகள் முடிந்தபின்பு உண்மைதெரியவரும்.- என்றார் இராணுவப் பேச்சாளர்.

இச்சம்பவம் இராணுவ முகாமுக்கு மிக அருகில் நடந்துள்ளதே என பிரசாத் சமரசிங்கவிடம் கேட்டபோது - முகாமில் இருந்து 500 மீற்றர் தூரம் தள்ளியே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதுவும் இரவில் நடந்துள்ளது. அந்த முகாமில் எத்தனை இராணுவத்தினர் உள்ளனர் என பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கூறமுடியாது.

ஆனால், படையினரால் இவ்விடயம் குறித்து எதுவும் செய்திருக்கமுடியாது. ஏனெனில் இரவில் எல்லாப் பகுதிகளையும் பார்ப்பதென்பது முடியாத விடயம். முகாமுக்கு தகவல் வந்தால் மாத்திரமே எங்களால் நடவடிக்கை எடுக்க முடியும்.

இருப்பினும் 10.30 மணிக்கு தகவல் வந்தவுடன் அவர்கள் அந்தப்பகுதிக்குச் சென்று தேடியிருக்கின்றார்கள் - என்றார். (எ-12)

# 'ஹெலி' எப்போது வேண்டும் என்பதை புலிகள் அறிவித்தால் அரசு வழங்குமாம்

## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கூறுகிறார்

கொழும்பு, ஏப்.20

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளை கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்வதற்காகத் தனியார் ஹெலிகொப்டர்களை வழங்க அரசு தயாராக இருக்கின்றது. ஹெலிகொப்டர்கள் எப்போது வேண்டும் என்பதைப் புலிகள் உடனடியாக அரசுக்கு அறிவிக்கவேண்டும். அதற்கான திகதியை அரசு புலிகளிடமிருந்து எதிர்பார்த்திருக்கிறது.

- இவ்வாறு அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று கொழும்பிலுள்ள தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோது தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இரண்டாம் கட்ட ஜெனீவாப் பேச்சில் புலிகள் கலந்துகொள்ளவேண்டும் என்றால் அவர்கள் மத்திய குழுக் கூட்டம் இடம்பெற வேண்டும் என்றும் - அதில் கலந்துகொள்ள கிழக்கிலுள்ள புலிகளின் தளபதிகள் கிளிநொச்சிக்கு அழைத்துவரப்படவேண்டும் என்றும் - அதற்கான பயண ஏற்பாடுகளை அரசு செய்துதரவேண்டும் என்றும் புலிகள் அரசிடம் கோரியிருந்தனர்.

அரசு கடற்பயண ஒழுங்கை செய்ய விரும்பியபோது புலிகள் அதை விரும்பவில்லை. இதனால், தனியார் ஹெலிக்கொப்டர்களை அமர்த்தி அவர்களுக்குப் பிரயாண வசதிகளைச் செய்துகொடுக்க அரசு முன்வந்துள்ளது.

இந்தச் செய்தியை நாம் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ளோம். புலிகள் இதற்கு இன்னும் உத்தியோகபூர்வமாக எமக்குப் பதிலளிக்கவில்லை.

ஜெனீவாப் பேச்சுக்கான நாள் நெருங்கிவருவதால் புலிகள் தங்கள் தளபதிகளைக் கிழக்குக்கு அழைத்துவர எப்போது ஹெலிகொப்டர்கள் வேண்டும் என்பதை உடனடியாக அரசுக்கு அறிவிக்கவேண்டும்.

புலிகளிடமிருந்து அதற்கான திகதியை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த விடயத்தில் ஈடுபட்டுவரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாக புலிகள் உடனடியாக இதுபற்றி அரசுக்கு அறிவிக்க வேண்டும் - என அவர் கூறினார். (க-07)

# சோபையிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டங்களைத் தவிர்த்து வீடுகளுக்குள் முடங்கிக்கொண்டனர். இதனால், வீதிகள் வெறிச்சோடிக்காணப்பட்டன.

பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை. காலையில் திறந்திருந்த ஓரிரு வர்த்தக நிலையங்களும் முற்பகலுடன் இழுத்து மூடப்பட்டன.

வாகனப் போக்குவரத்துகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெற்றன.

மக்கள் நடமாட்டம் மிகவும் குறைந்திருந்தமை அந்தப் பகுதிகளில் பயப்பீதியுடனான நிலைமை நிலவியதை எடுத்துக்காட்டியது என்று எமது பிரதேசச் செய்தியாளர்கள் தெரிவித்தனர். (எ-13)(33)

இதோ வெளிவந்து விட்டது
நாக. தமிழிந்திரனின்
A/L 2006 தமிழ் 1, 11 (பரீட்சை)
வினாவிடைத் தொகுப்பு
கிடைக்குமிடங்கள்:
BEACON யாழ்ப்பாணம்
D.C.M. யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா- யாழ்
வெற்றி வழி
விசேட வெளியீடு

பணிநிலை வேண்டுகை
புத்தகம் கட்டுனர் (பெண்கள்)
(Book Binders)
விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் 25.04.2006 ஆம் திகதிக்கு முன் காலை 11.00 மணி—மாலை 4.00 மணி வரை நேரில் சமூகம் தரவும்
கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல:424, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

மாபெரும் வணிகக்கல்வி கருத்தரங்கு
காலம்: இம்மாதம் 29, 30 ஆம் திகதிகள்
விடயம்:
★ நடைமுறை விடயங்கள்
★ பிறமாவட்ட கருத்தரங்க கருத்துகளின் தொகுப்பு
★மாதிரி வினாத்தாள்
அனுமதி நிலையங்கள் விக்னா, Beacon, நிரு
அனுமதிக்கான இறுதித் திகதி:
27.04.2006
By: திரு.S.யசோ
Note: வெளி நிறுவன மாணவர்களும் கலந்துகொள்ளலாம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,

2006 மே

வெளியீடு 02

# மாதிரி வினாப்பத்திரம்


## பௌதிகவியல் - I

திரு. பொ. தவசிதன். B.Sc. திருகோணமலை.

*பகுதி - 1*

*கணிப்பான்கள் பயன்படுத்தல் தவிர்க்கப்பட வேண்டும்.*
*எல்லா வினாக்களுக்கும் விடை தருக. ($g = 10\ Nkg^{-1}$)*

42. பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
   1. வாயு ஒன்றின் அமுக்கமானது ஓர் அலகு கனவளவு இயக்கசக்திக்குச் சமனாகும்.
   2. எல்லா வாயுக்களுக்கும் அமுக்கத்தினதும் கனவளவினதும் பெருக்கம் மாறிலியாகும்.
   3. வாயு மூலக்கூறுகளின் சராசரி இயக்க சக்தியானது தனி வெப்பநிலைக்கு நேர் விகித சமனாகும்.
   4. வாயு மூலக்கூறுகளின் சராசரி இயக்க சக்தியானது தனி வெப்ப நிலையின் வர்க்க மூலத்திற்கு நேர் விகித சமனாகும்.
   5. எல்லா வாயுக்களும் PV/T = மாறிலியாகும்.

43. 


தரப்பட்ட வோல்ற்றளவு பிரிப்பில் (Voltage divider)
Vo / V எனும் விகிதம் யாது?
1. 1/3  2. 1/4  3. 4
4. 4/3  5. 1

44. $1 \times 10^5$ Pa அமுக்கத்தில் உள்ள $1\ m^3$ கனவளவு உள்ள வாயு ஒன்றின் அகச்சக்தி யாது?
1. $1 \times 10^5$ J  2. $2.5 \times 10^5$ J  3. $2 \times 10^5$ J  4. $3 \times 10^5$ J  5. $1.5 \times 10^5$ J

45. ஒரு திண்மக்கோளம் வெப்பமேற்றப்படும்போது பின்வருவனவற்றில் எது அதிகரிக்கும் வீதம் கூடும்.?
1) விட்டம்  2) பரப்பு  3) கனவளவு  4) அடர்த்தி  5) திணிவு

46. சம ஆரை உடைய q ஏற்றம் கொண்ட 1000 நீர்த்துளிகள் $v$ அழுத்த வேறுபாட்டில் உள்ளது.
இவை ஒன்று சேர்வதால் உருவாகும் புதிய அழுத்தம் V எனின $v$ / V என்ற விகிதம் யாது?
(1) $10^{-3}$  (2) $10^{-2}$  (3) $10^2$  (4) $10^3$  (5) 10

47. புவி ஈர்ப்பு, ஆர்முடுகல அதன் மேற்பரப்பில் $9.8 ms^{-2}$ ஆகும். புவியின் பருமன் உடைய ஆனால், இருமடங்கு அடர்த்தியுடைய கோளின் மேற்பரப்பு ஆர்முடுகல் யாது?
1) $19.6\ ms^{-2}$  2) $9.8\ ms^{-2}$  3) $409\ ms^{-2}$  4) $2.45\ ms^{-2}$  5) பூச்சியம்

48. ஏற்றம் ஒன்று சீரான காந்தப் பிரதேசத்தினுள் மாறாக் கதியுடன் அவற்றிற்கு செங்குத்தாக செல்கிறது எனின்.
1) அதன் சகதி, உந்தம் மாறும்  2) அதன் சக்தி மாறும், உந்தம் மாறாது
3) அதன் சக்தி மாறது, உந்தம் மாறும்  4) அதன் சக்தி, உந்தம் மாறாது.
5) கூற முடியாது.


49. சீரான காந்தப்புலத்தினுள் இலத்திரன், β துணிக்கை ஒரே அழுத்த வேறுபாட்டினூடு ஆர்முடுக்கப்பட்டன. எனின் பின்வருவனவற்றுள் சரியானது?
1) இலத்திரன் பாதையிலும் β துணிக்கையின் பாதை சிறியது.
2) இலத்திரன் பாதையிலும் β துணிக்கையின் பாதை பெரியது.
3) இரண்டும் நேர்கோட்டில் செல்லும்
4) இரண்டும் நேர்கோட்டின் எதிர் திசையில் செல்லும்
5) இரண்டின் பாதையின் ஆரைகள் சமனாகும்.

50. ஒரு திரவ தாங்கியில் முற்றுமுழுதாக திரவம் நிரம்பியுள்ளது தாங்கி ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் ஏகபரிமான விரிகைத்திறன் $2 \times 10^{-6}\ {}^0c^{-1}$ திரவத்தின் கனவளவு விரிகைத்திறன் $6 \times 10^{-6}\ {}^0c^{-1}$ எனின் தாங்கி வெப்பம் ஏற்றப்படும்போது
1) திரவம் தாங்கியிலிருந்து வெளியேறும்
2) தாங்கியில் திரவமட்டம் இறங்கும்
3) தொடர்ந்து திரவமட்டம் மாறாது
4) திரவமட்டம் ஏறுவதும் or இறங்குவதும் திரவ தாங்கியின் தன்மையில் தங்கி இருக்கும்
5) திரவமட்டம் ஏறி பின் இறங்கும்

51. ஒரு கதிர் தொழிற்பாடுடைய சமதானியின் அரை ஆயுள் 2 நிமிடங்கள், $மட_e 2 = 0.7$ எனக் கொண்டால் அதன் தேய்வு ஒருமை
1. $0.0058\ s^{-1}$  2. $0.35\ s^{-1}$  3. $1.4\ s^{-1}$  4. $2.86\ s^{-1}$  5. $.84\ s^{-1}$


52. γ கதிர் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் உண்மையானது எது?
1. ஆர்முடுக்கப்படும் இலத்திரன்கள் உலோகத்தட்டில் விழும்போது γ கதிர் பிறப்பிக்கப்படும்
2. அவை X - கதிர்களை விட கூடிய அலை நீளம் உடையன.
3. 1 cm தடிப்புள்ள அலுமினியம் குற்றி அவற்றை முற்றாக உறிஞ்சாது.
4. ஒரு நியூத்திரன் ஒரு புரோத்தனாக மாறும்போது γ கதிர் பிறப்பிக்கப்படும்.
5. அவற்றின் பாதை மின்புலத்தினால் திசை திருப்பம் அடையும்

53. வெப்பநிலையுடன் பாகுநிலைக்குணகமானது.
1. வளியிற்கு அதிகரிக்கும், திரவத்திற்கு குறையும்.
2. வளியிற்கு குறையும், திரவத்திற்கு அதிகரிக்கும்.
3. இரண்டிற்கும் அதிகரிக்கும்.
4. இரண்டிற்கும் குறையும்.
5. மாறாது.

54. 


+q ஏற்றம் ஒன்று வட்டம் ஒன்றின் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது. புள்ளி A யில் இருந்து B யிற்கு ஓர் அலகு ஏற்றத்தை எடுத்துச் செல்ல $W_1$ வேலை செய்ய வேண்டும். அதே வேலையை A யில் இருந்து C யிற்கு கொண்டு செல்ல $W_2$ வேலை செய்ய வேண்டி ஏற்படின் பின்வருவனவற்றுள் சரியானது?
(1) $W_1 < W_2$  (2) $W_1 > W_2$  (3) $W_1 = W_2$
(4) $W_1 = W_2 = 0$  (5) $W_1 \neq W_2$

55. அருகில் காட்டப்பட்ட கோளப்பகுதி உலோகமாக இருப்பின் மின்புலக் கோட்டினை சரியாக காட்டுவது?
(1) A  (2) B  (3) C  (4) D
(5) E





56. புவியில் 2m உயரத்திற்கு துள்ளும் ஒருவர் புவியின் அடர்த்தியின் 1/3 பங்கும் ஆரையின் ¼ பங்கும் உடைய ஒரு கோளில் அதே நபர் அதே சக்தியை பிரயோகித்து கோளில் துள்ளும் போது மனிதன் எழும் உயரம் யாது?
(1) 4m  (2) 8m  (3) 12m  (4) 24m  (5) 32m


57. புவியைச்சுற்றி குறித்த ஒழுக்கில் வரும் ஒரு கோலின் மையநாட்ட விசை தங்கி இருப்பது ( provided )
(1) உபகோளின் எஞ்சினில் உள்ள எரிபொருள்.
(2) உபகோளில் இருந்து வெளியேறும் வெப்ப வாயு.
(3) சந்திரனின் ஈர்ப்புவிசை.
(4) உபகோளின் வடிவம்.
(5) புவிஈர்ப்பு விசை.

58. $1.67 \times 10^{-27}$kg திணிவும் $1.67 \times 10^{-19}$c ஏற்றமும் உடைய ஒரு புரோத்திரன் $2 \times 10^6 ms^{-1}$ வேகத்துடன் Y அச்சு திசையில் உள்ள 0.014T காந்தப்பாய அடர்த்தியுடைய பிரதேசத்தினுள் x அச்சுடன் $60^0$ கோணம் ஆக்கத்தக்க திசையில் உட்புகுகின்றது. ஆயின் இதன் பாதையும் அலைவு காலமும்?
1) 0.1m ஆரையுடைய வட்டம் , $2\pi \times 10^{-7}$s.
2) 0.2 m ஆரையுடைய வட்டம், $\pi \times 10^{-7}$s.
3) 0.1m ஆரையுடைய நீள் வட்டம், $2\pi \times 10^{-7}$s.
4) 0.2m ஆரையுடைய நீள் வட்டம், $4\pi \times 10^{-7}$s.
5) நேர் கோடு.

59. தடித்த கடத்தியொன்றின் அச்சில் இருந்தான தூரத்துடன் காந்தப்பாய அடர்த்தி மாறும் விதம்?





60. P-N சந்திக்கிடையில் ஏற்றம் மாறுபடும் விதம்?




## பௌதிகவியல் II


### பகுதி "A" அமைப்புக் கட்டுரை

1. பாடசாலை ஆய்வு கூடத்தில் ஒரு ரூபாய் நாணயம் ஒன்றின் திணிவை அளக்க ஒரு மாணவன் எத்தனிக்கின்றான் அவனின் வலதுகையானது ஊனமுற்றுக் காணப் படுகின்றது. இருந்தும் அவன் பரிசோதனையை செய்ய முன்வருகின்றான்.




i. படத்தில் காட்டப்பட்ட கருவியின் பெயர் யாது?
..........................................................................
ii. படத்தில் காட்டப்பட்ட A, B, C, D, E, F, G, H என்பவற்றை பெயர் இடுக
A ..........................................................................
B ..........................................................................
C ..........................................................................
D ..........................................................................
E ..........................................................................
F ..........................................................................
G ..........................................................................
H ..........................................................................
iii. இக்கருவியில் குண்டு நூல் பயன்படுத்த காரணம் யாது?
..........................................................................
iv. இம்மாணவன் எப்பக்கத்தில் ரூபா நாணயத்தை இடுவான்?
..........................................................................
v. இங்கு ரூபாய் நாணயத்தை தட்டில் இடுவதற்கு பயன்படும் உபகரணம் யாது? ஏன் அதனைப்பயன்படுத்த வேண்டும்?
..........................................................................
..........................................................................
vi. தராசுத் தட்டில் கடிகாரக் கண்ணாடி அல்லது கண்ணாடிப் பாத்திரம் போன்றவற்றை வைத்து அதனுள் பொருள்களை இட வேண்டும் என்று ஆசிரியர் எடுத்துரைத்தார் ஏன் என விளக்குக?
..........................................................................
..........................................................................
vii. ஏனைய தராசில் இருந்து இது வேறுபடக் காரணம் யாது?
..........................................................................
viii. உமது ஆய்வு கூடத்தில் பயன்படுத்தப்படும் தராசின் மூலம் அளக்கக் கூடிய சிறிய திணிவின் இழிவு நிறை யாது?
..........................................................................
ix. ஒரு பிழையான தட்டை ... ண்ட தராசு மூலம் ஒரு பொருளின் நிறையை நிறுத்த போது 1 mg,ஆனது 1.02 mg என வாசிப்பு பெறப்பட்டது எனின் இப்பொருளின் உண்மை வாசிப்பு யாது?
..........................................................................


2. ஒப்பமான தளத்தில் 1.2 kg, 1.8 kg ஆகிய திணிவுகளையுடைய திண்ம கனவுருக்கள் வைக்கப்பட்டு இவற்றை நோக்கி கிடையாக 3.5 g திணிவுள்ள சன்னம் ஒன்று சுடப்படுகிறது.
அது முதலாவது கனவுருவை துளைத்து மற்றைய கனவுருவினுள் புதைகின்றது, இதனால் ஓய்விலுள்ள இக்கனவுருக்கள் முறையே $0.63\ ms^{-1}$, $1.4\ ms^{-1}$ வேகங்களைப் பெறுகின்றன.




மோதுகையால் திணிவு இழப்பு ஏதும் ஏற்படவில்லை எனக்கருதி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
i. இரண்டாவது கனவுருவை அடிக்கச் சற்று முன் சன்னத்தின் வேகம் யாது?
..........................................................................
ii. சன்னம் முதலாவது கனவுருவை அடிக்கச் சற்று முன் அதன் வேகம் யாது?
..........................................................................
iii. சன்னத்தின் ஆரம்ப இயக்க சக்தி யாது?
..........................................................................
iv. சன்னத்தின் இறுதி இயக்க சக்தி யாது?
..........................................................................
v. தொகுதியில் ஏற்பட்ட சக்தியிழப்பு வீதம் யாது?
..........................................................................
..........................................................................
..........................................................................
vi. இரண்டாவது கனவுரு $1.4\ ms^{-1}$ எனும் மாறா வேகத்துடன் சென்று 0.25 உராய்வுக் குணகம் உடைய தளத்தினுள் உட்புகுந்து இருக்குமாயின், உராய்வான தளத்தில் கனவுரு எவ்வளவு தூரத்தில் ஓய்வடையும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. திரவங்களின் அடர்த்தியை துணிவதற்கு பயன்படுத்தப்படும் நீர்மானியை அருகில் உள்ள உரு காட்டுகிறது.




i ) XY,A,B என்பவற்றை பெயரிடுக.

X Y ..........

A ..........

B ..........

ii ) XY இல் $20^0$ c எனக் குறிக்கப்பட்டுள்ளது ஏன்?

iii ) XY ஒடுங்கியதாக இருப்பதற்கு காரணம் யாது?

iv ) A- பெரிதாக அமைக்கப்பட்டிருப்பது ஏன்?

v ) B- பாரம் ஏற்றப்பட்டுள்ளதன் காரணம் யாது?

vi ) இரு வெவ்வேறு திரவங்களில் மிதக்கின்ற போது X, Y இல் திரவமட்டம் இருக்கின்றதாயின் அவற்றின் சார் அடர்த்தி $S_X$, $S_y$ பற்றி யாது கூறுவீர்?


vii ) 25 cm நீளமும் 0.2 cm குறுக்கு வெட்டு முக ஆரையும் உடைய ஓர் உருளைவடிவான தண்டு 7cm நீளமும் 1 $cm^2$ குறுக்கு வெட்டுமுக ஆரையும் உடைய ஒரு மூடிய உருளையுடன் ஒரே அச்சில் இருக்குமாறு பொருத்தப்பட்டுள்ளது. இச்சேர்மானத்தின் நிறை 17.6 g ஆகும். இது முறையே,

a . தண்டு முழுவதும் திரவப்பரப்பிற்கு மேல் இருக்கத்தக்கதாக அமிழுமாயின் அமிழ்ந்துள்ள திரவத்தின் அடர்த்தி யாது?

b. தண்டு முழுவதும் திரவத்தினுள் அமிழுமாயின் அமிழ்ந்துள்ள திரவத்தின் அடர்த்தி யாது?

c. X இல் இருந்து Y இற்கு செல்லும் போது அளவிடைப்பிரிவுகளின் இடைவெளி அதிகரிப்பதன் காரனம் யாது?

04.




காட்டப்பட்ட பரிசோதனை அமைப்பானது திரவமொன்றின் நிரம்பலாவி அமுக்கத்தை துணிவதற்கான மாதிரியாகும். ஆரம்பத்தில் பம்பி மூலம் திரவத்தின் மேற்பரப்பில் காணப்படும் அமுக்கமானது குறைக்கப்படும். பின்னர் திரவம் கொண்ட குடுவை வெப்பமாகப்படும். அப்போது ஆவி நிரம்பலாக்கப்படும்.

i. இரசமட்டம் காட்டப்பட்டவாறு காணப்படக் காரணம் யாது?

ii. இங்கு பெரிய கொள்கலன் வைக்கப்பட காரணம் யாது?

iii. x எனக்காட்டப்பட்ட அமைப்பின் நோக்கம் யாது?

iv. தரப்பட்ட அமைப்பில் இருந்து வளிமண்டல அமுக்கம் $P_a$ எனக் கொண்டு இரச அடர்த்தி ρ எனக்கருதி நிரம்பலாவி அமுக்கத்திற்கான சமன்பாட்டை எழுதுக?

v. நிரம்பிய, நிரம்பா ஆவிகளின் அமுக்கமானது, கனவளவு, வெப்பநிலையுடன் தனித்தனியாக மாறுபடும் விதத்தை வரைபுபடுத்துக.

vi. திரவத்தை கொண்ட கொள்கலனில் வெப்பநிலை அதிகரிக்கும் போது ஆவியில் ஏற்படும் மாற்றங்கள் எவை?

vii. அடைக்கப்பட்ட கொள்கலனில் $77^0C$ யில் 1000 mmHg அழ்க்கத்தில் நிரம்பலாவி உள்ளது.இதன் வெப்பநிலை $27^0C$ ஆக குறைக்கப்படும் போது புதிய அமுக்கத்தை காண்க?

($77^0C$, $27^0C$ யில் நீரின் நிரம்பலாவி அமுக்கம முறையே344mmHg ,27mmHg)

## பகுதி - B

*விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.*

1 . தரப்பட்ட பந்தியை வாசித்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை அளிக்க.

ஓர் ஒலிமுதல் ஒரு செக்கனில் குறிப்பிட்ட அளவு சக்தியை வெளியேற்றுகின்றது. இது ஒலி முதலுக்கு முதல் வேறுபட்டுக் காணப்படும். இவ் ஒலி அலைகள் ஒரு கோளவடிவான பகுதியை உள்ளடக்கத் தக்கதாக வெளியில் பரவுகின்றது. இவ் ஒலியின் அளவை அதாவது ஓரளகு சராசரிப் பரப்பினூடு ஓரலகு நேரத்தில் வெளியேற்றப்படும் சக்தியே இதன் செறிவு என அழைக்கப்படும். ஒலிச் செறிவானது $I = 2\pi^2 \rho V f^2 a^2$ எனும் சமன்பாட்டினால் தரப்படும். இங்கு $\rho$ ஒலி பயணம் செய்யும் ஊடகத்தின் அடர்த்தி, $f$ ஒலியலையின் அதிர்வெண், a ஒலியலையின் வீச்சம், V ஒலியலை செல்கின்ற ஊடகத்தில் ஒலியலையின் வேகம், இவ் ஒலியலைகளின் செறிவு மட்டத்தை டெசிபல் (dB) என்னும் அலகினால் அளக்கின்றோம். இது $\beta = 10 \ell og (I/I_0)$ எனும் சூத்திரத்தின் மூலம் கணிக்கப்படுகின்றது. இங்கு $I_0$ என்பது ஒரு மனிதனால் கேட்கக்கூடிய இழிவு ஒலிச்செறிவாகும் ($I_0 = 10^{-12}$ $Wm^{-2}$). மனிதன் உணரக்கூடிய உயர் ஒலிச் செறிவு பூச்சியம் ஆகும்.

i. ஒலியின் செறிவு எக்காரணிகளில் தங்கியுள்ளது?

ii. மனிதன் உணரக்கூடிய ஒலிச் செறிவு வீச்சு யாது?

iii. ஒலிச் செறிவுக்கு தரப்பட்ட சமன்பாடு தவிர இன்னுமோர் சமன்பாட்டை தருக. (கணியங்களை அடையாளம் காட்டுக)


iv. மனிதனால் உணரக்கூடிய ஒலிச்செறிவு மட்ட வீச்சு யாது?

v. வளியின் அடர்த்தி 1.29 $kgm^{-3}$ ஆகவும், ஒலியின் வேகம் 332.5 $ms^{-1}$ ஆகவும் உள்ள ஒரு நாளில் 1000 Hz அதிர்வெண்ணுடன் ஓர் ஒலிமுதல் $3 \times 10^{-6}$ $Wm^{-2}$ ஒலிச்செறிவுள்ள ஒலியை எழுப்புகின்றது ஆயின், ஒலியலையின் வீச்சம் யாது?

vi. ஒரு மனிதன் வெவ்வேறு தூரங்களில் உள்ள ஒலிபெருக்கி மூலம் எழுப்பப்படும் ஒலியை தனித்தனியே உணரும்போது 120 dB உம், 92 dB உம் ஆக இருந்தது.


a. இரு ஒலிபெருக்கிகளும் ஒன்றாக ஒலிக்கும்போது அவர் உணரும் ஒலிச்செறிவு மட்ட வித்தியாசம் யாது?

b. ஒலிபெருக்கிகளின் ஒலிச் செறிவுகளின் விகிதம் யாது? $(\ell og^{-1} 2.8 = 630)$




c. நிலத்திற்கு மேல் 10 m உயரம் வரைக்கும் கொங்கிறீட் கூரை அமைக்கப்பட்டு அதே உயரம் உடைய நேர்கோட்டு ஒலிமுதல் (Line Sound Source) 1.6 x $10^4$ W வலுவுடன் ஒலி எழுப்புகின்றது. எனின் ஒலிமுதலில் இருந்து 12 m தொலைவிலுள்ள நபர் உணரும் ஒலிச்செறிவு யாது?

2. $\mu_0$ முறிவுச் சுட்டியுடைய செங்கோண அரியமொன்றின் மேற்பரப்பில் μ முறிவுச் சுட்டியுடைய கண்ணாடிக் குற்றி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இவற்றின் பொது மேற்பரப்புக்களினூடு செல்லும் ஒளிக்கற்றை ஒன்று P இல் முறிவடைகின்றது.




i. பக்கம் BC யினூடு வெளிப்படும் கதிரின் வெளிப்படுகோணம் $i$ ஆயின் $\text{Sin}\, i = \sqrt{\mu_O^2 - \mu^2}$ எனக் காட்டுக?

ii. $\mu_0 = 1.5$ உம், $\mu = 1.48$ உம் ஆக இருக்கும்போது கண்ணாடி அரிய இடைமுகத்தின் அவதிக்கோணம் யாது?

iii. அரியம் இழிவு விலகல் நிலையில் உள்ளதாயின் அரியத்தின் உச்சிக் கோணங்கள் யாவை?

iv. கதிரின் வெளிப்படு கோணம் யாது?

v. $\mu > \mu_0$ ஆயின் யாது நடைபெறும்? விடைக்கான காரணம் தருக?

3. $PV = \frac{1}{3} mNc^{-2}$ என்னும் சமன்பாட்டில் வரும் குறியீடுகளை இனங்காண்க.


இதிலிருந்து வாயுவின் சராசரி அமுக்கம் $P = \frac{1}{3} \rho c^{-2}$ என்னும் சமன்பாட்டைப் பெறுக.

மூலக்கூறுகளின் சராசரி இயக்கச் சக்தி $E = \frac{3}{2} KT$ . இங்கு K போட்ஸ்மன் (Boltzman) மாறிலி ஆகும் எனின், மேலே உள்ள சமன்பாடு / சமன்பாடுகளை பயன்படுத்தி P = NKT எனும் சமன்பாட்டைப் பெறுக.

3K வெப்பநிலையில் 1 $cm^3$ இல் உள்ள வாயு மூலக்கூறுகளின் எண்ணிக்கை 5 ஆயின், அவ்வாயுவால் உருவாக்கப்படும் சராசரி அமுக்கம் யாது?

($K = 1.38 \times 10^{-23}$ $J K^{-1}$)

4.




படத்தில் காட்டப்படுவது மின் கடத்தியொன்றாகும். இதனுடு மிண்ணோட்டம் பாயும்போது அதற்கு செங்குத்தாக காந்தப்புலம் பிரயோகிக்கப்படுகின்றது அப்போது கடத்திக்கு குறுக்கே ஹோல் அழுத்தம் உருவாக்கப்படுகின்றது.

i) கடத்திற்கு குறுக்கே உருவாக்கப்படும் மின்புலச் செறிவு யாது?

ii) கடத்தியில் பயணம் செய்யும் $e^n$ இன் வேகம் யாது?

iii) கடத்தியில் பயணம் செய்யும் $e^n$ தாக்கும் காந்த விசை, மின் விசை என்பவற்றைக் காண்க?

iv) கடத்தியில் ஒரு கனவளவில் உள்ள $e^n$ எண்ணிக்கையைக் காண்க?

v) $e^n$ இல் தொழிற்படும் விசையையும் மின்புலச்செறிவின் திசையையும் வரிப்படத்தில் காட்டுக?

(பௌதிகவியல் -I , பகுதி -B இன் வினாக்களின் தொடர்ச்சி 27.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

## அன்பு மாணவர்களே!

*இலங்கையின் கல்வியில் தலைசிறந்து விளங்கும் மாவட்டங்களின் முன்னணி ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாளும், விடைகளும் உங்கள் பரீட்சை நலன்கருதி இங்கு வெளிவருகின்றன. அந்தவகையில் எதிர்வரும் வாரங்களிலும் தலைசிறந்த ஆசிரியர்களின் பரீட்சை எதிர்பார்ப்புடன் கூடிய வினாத்தாள்களும் வெளிவரவுள்ளன. அத்துடன், எமது கல்விச்சுடரினால் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைத் தோற்று வித்துக்கொண்டிருக்கும் பிரபல ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாள்களும் எதிர்வரும் காலங்களிலும் இப்பகுதியில் பிரசுரிக்கப்படவுள்ளன. பரீட்சை நடைபெறும் திகதி வரை எம்மால் வெளியிடப்படும் பல வினாத்தாள்களில் பல ஆசிரியர்களின் வேறுபட்ட வினா "வியூகங்கள்" அமைந்திருப்பதால் இப்பகுதியில் வெளிவரும் வினாக்களில் பெரும்பாலானவை இறுதி அரசப்பரீட்சைகளின் வினாக்களாக வெளிவரும் என்பதில் கல்விச்சுடர் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே மாண வர்களே! உங்கள் சிறந்த பெறுபேறுகளுக்காகக் கல்விச்சுடருடன் இணைந்தி ருங்கள்.*

கல்விச்சுடரில் வெளிவரும் வினாக்களிலும், விடைகளிலும் ஏதாவது தவறுகள் அல்லது சந்தேகங்கள், விளக்கமின்மைகள் ஏற்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டால் அல்லது விலாசத்திற்கு எழுதி அனுப்பினால் உரிய ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு உங்களது சந்தேகங்கள் தெளிவாக்கப்படும்.

தொ.பே. இல. 0714-273035, 0714-220008

**கல்விச்சுடர்**

**உதயன் பணிமனை,**

361, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org